# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறது.

(நெகேமியா 2:18)

**THE THAMIZH PRADHESA ASSEMBLIES OF GOD**

January - February 2026
Volume : 66
ஆண்டு சந்தா ₹120/-
Issue : 1

## மதுரை கிழக்கு மண்டலம் புலியூர் AG சபை ஆலய பிரதிஷ்டை










## மதுரை ஒத்தக்கடை AG சபை ஆலய பிரதிஷ்டை









## செங்கோட்டை மண்டல மிஷன் கன்வென்ஷன்





ஆசிரியரிடமிருந்து........!



# தேவனுடைய கரம் உங்கள்மேல் நன்மையாக காணப்படும்

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு 2026 ஆண்டு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்! கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் தம்முடைய கரத்தினால் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

**'தேவனுடைய கரம்'** மகா உன்னதமான ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் நமக்கு அளவில்லாமல் அள்ளித் தருகிறது. அவரது கரம் தரும் நன்மைகளை வேதம் முழுவதிலும் நாம் காண முடியும். தேவனுடைய கரம் என்பது நம்முடைய தேவனின் வல்லமை, ஆளுமை, அதிகாரம், பிரசன்னம் ஆகியவற்றை குறிக்கிறது. வேதம் முழுவதிலும் 'கர்த்தருடைய கரம்' என்ற பதம் 39 இடங்களிலும், 'தேவனுடைய கரம்' என்கிற பதம் 16 இடங்களிலும் வருகிறது. இந்த இடங்களில் தேவனுடைய கரம் இரண்டு விதங்களில் வெளிப்படுவதை நாம் காண முடியும். ஒன்று, தேவ ஜனங்களை ஆசீர்வதிக்க தேவ கரம் நீட்டப்படுகிறது. இரண்டாவதாக, எதிரிகளை முறியடிக்கவும், அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கவும் வெளிப்படுகிறது. தேவ ஜனங்களாகிய நாம் இந்த 2026 ஆண்டு கர்த்தருடைய வழிகளில் நடக்கவும், அவரை நேசிக்கவும், தேடவும் தீர்மானிக்கும்போது நெகேமியா கூறுவது போல, தேவனுடைய கரம் நம்மேல் நன்மையாக காணப்படும் (நெகேமியா 2:18)!

## விடுவிக்கும் கரம்
## SAVING HAND

தேவனுடைய கரம், கை, புயங்கள் என்கிற பதங்களை முதலாவது யாத்திராகமத்தின் புத்தகத்தில் நாம் அதிகமாக காண்கிறோம். இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்தினால் தவித்துக் கொண்டிருக்கும்போது தேவனை நோக்கி முறையிட்டார்கள் (யாத்.2:23-25). அப்பொழுது தேவன் அவர்களை தம்முடைய வல்லமையான கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் விடுவித்தார் (யாத்.6:6; உபா.5:15). எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் ஜனங்களை விடுவிக்க ஆரம்பத்தில் மறுத்தான். ஆனால் கர்த்தருடைய கரம் எகிப்தியர் மேல் செய்த தண்டனைகள், வாதைகள், இஸ்ரவேலருக்கு செய்த அற்புதங்களை அவன் கண்டபோது, அவர்களை விடுதலையாக்க அனுமதித்தான் (யாத்.3:19,20; 9:2,3;13:3;15:6). ஆம் பிரியமானவர்களே, தேவன் இந்த ஆண்டு தம்முடைய கரத்தின் வல்லமையில் உங்களை சகல கட்டுகள் மற்றும் அடிமைத்தனத்தினின்றும் விடுவிப்பார். மேலும் இரட்சிக்கப்படாத உங்கள் குடும்பத்தினரையும் விடுவித்து இரட்சிப்பார்! இரட்சிக்கக்கூடாதபடிக்கு அவருடைய கரம் குறுகிப் போகவும் இல்லை (ஏசாயா 59:1).

## தேவைகளை சந்திக்கும் கரம்
## SUPPLYING HAND

தேவனுடைய கரம் தரும் நன்மைகளைக் குறித்து இரண்டாவதாக எஸ்றா, நெகேமியா புத்தகங்களில் வாசிக்கிறோம். தேவனுடைய கரத்தைக் குறித்து ஒன்பது இடங்களில் இந்த இரண்டு புத்தகத்திலும் வாசிக்கிறோம். எஸ்றா சிறையிருப்பிலிருந்து தாயகம் திரும்புகிறார். தேவனுடைய கரம் அவரோடு இருந்ததினால் அவர் கேட்டதையெல்லாம் ராஜா அவருக்கு கொடுத்தார் (எஸ்றா 7:6). மேலும் நெகேமியா எருசலேமிற்கு சென்று இடிந்த அலங்கத்தை கட்ட தீர்மானிக்கும் போது, ராஜா அவருக்கு அனுமதி கொடுத்ததோடு, அவருக்கு தேவையான அனைத்தையும் கொடுக்கக் கட்டளையிட்டார் (நெகே.2:8). கர்த்தருடைய கரம் எந்த மனிதனோடிருக்கிறதோ அந்த மனிதனின் வாழ்வு வித்தியாசமாக இருக்கும். அவனுடைய தேவைகளை கர்த்தர் அற்புதமாக சந்திப்பார். இருப்புத்தாழ்ப்பாள்களை முறித்து வெண்கலக் கதவுகளை உடைத்து ஒளிப்பிடத்திலுள்ள பொக்கிஷங்களையும் மறைவான புதையல்களையும் நமக்கு தருவேன் என்று வாக்குப்பண்ணியிருக் கிறார் (ஏசாயா45:4). எது எங்கு கிடைக்காது என்று நாம் மலைத்து நிற்கிறோமோ, எதை எவர் நமக்குத் தரமாட்டார்கள் என்று திகைத்து நிற்கிறோமோ அதை அந்த இடத்திலிருந்தே பெற்றுத் தர தேவனுடைய கரம் வல்லமையுள்ளது என்பதை மேல் குறிப்பிட்டுள்ள வசனங்கள் நமக்கு காட்டுகின்றன. நம்முடைய தேவைகளை சந்திக்க முடியாதபடி அவருடைய கரம் குறுகிப்போகவில்லை என்று எண்ணாகமம் 11:23 கூறுகிறது. தேவ ஜனமே, கர்த்தர் தம்முடைய கரத்தினால் உங்களை போஷிப்பார், பராமரிப்பார், திருப்தியாக்குவார் (சங். 145:16) ! ஆமென்.

## பாதுகாக்கும் கரம்
## SHIELDING HAND

'தேவனுடைய கரம் எங்கள் மேலிருந்து, வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருக்கிறவர்களின் கைக்கும் எங்களை தப்புவித்தது' என்று எஸ்றா கூறுகிறார் (எஸ்றா 8:31). எஸ்றா, முதலாம் மாதம் பாபிலோனிலிருந்து புறப்பட்டு ஐந்தாம் மாதத்தில் எருசலேம் வந்து சேருகிறார் (எஸ்றா 7:8;8:31). ஏறக்குறைய 900 மைல்கள், 150 நாட்கள் பயணத்தில் மனிதர்களால், மிருகஜீவன்களால், சீதோஷன மாற்றங்களால் எத்தனையோ இடர்கள் அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் தேவனுடைய கரம் அவரோடு இருந்தபடியால் அவர் போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு தேவனுடைய கரம் அவரை பத்திரமாக கொண்டு போய்ச் சேர்த்தது. ஏசாயா 51:16-ல் 'என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்' என்று கர்த்தர் கூறுகிறார். கர்த்தருடைய கரம் நம்மேல் இருக்கும்போது வியாதியோ, விபத்துக்களோ, விஷப்பூச்சிகளோ, விழுங்கப்பார்க்கும் மனிதர்களோ நம்மை சேதப்படுத்த முடியாது (சங்.91:1-13; 57:3; யோவான் 10:27-29). தேவனுடைய பலத்த கரம் உங்களை எல்லா தீமைக்கும் விலக்கி பாதுகாக்கும் (சங்.121:7,8) மற்றும் வாழ்க்கை பயணத்தில் பத்திரமாக அக்கரைக் கொண்டு சேர்க்கும் (அப். 27:44; யூதா 24)!

## பலப்படுத்திப் பயன்படுத்தும் கரம்
## STRENGTHENING HAND

'கர்த்தருடைய கரம்' என்கிற பதம் மூன்றாவதாக எசேக்கியேல் புத்தகத்தில் அதிகமாக (ஏழு முறை) காணப்படுகிறது. கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் குறித்து ஒரு உன்னத திட்டத்தையும், நமக்கென்று ஒரு ஊழியத்தையும், பணியையும் வைத்திருக்கிறார். அந்த பணியை நிறைவேற்ற கர்த்தருடைய கரம் நம்மை

பலப்படுத்தும், தகுதிபடுத்தும், பயன்படுத்தும்! கர்த்தர் எசேக்கியேலை தீர்க்கதரிசனம் உரைக்கும்படி தெரிந்துகொண்டார். அதை நிறைவேற்ற கர்த்தருடைய கரம் அவர்மேல் அமர்ந்தது என்று வேதம் கூறுகிறது (எசே.1:3;3:14; 3:22; 8:1; 33:22; 37:1; 40:1). கர்த்தருடைய கரம் எசேக்கியேலை அவர் போக முடியாத இடங்களுக்கு கொண்டு சென்றது. காணமுடியாத காரியங்களை காண செய்தது. ஊழியத்தை நிறைவேற்ற பெலன் தந்தது. எஸ்றா நெகேமியா போன்ற தேவ மனிதர்களையும் தேவனுடைய கரம் அவர்களைக் கொண்டு நிறைவேற்ற வேண்டிய காரியங்களை சிறப்பாக நிறைவேற்றி முடிக்க பயன்படுத்தியது (எஸ்றா 7:28; நெகே.2:18; 6:15,16). ஆம், கர்த்தர் தம்முடைய கரத்தை உங்கள்மேல் வைத்து இந்த ஆண்டு உங்களைக் கொண்டு செய்ய நினைத்திருக்க அனைத்தையும் செய்து முடிப்பார்! உங்களை ஆச்சரியமாக பயன்படுத்துவார்!.

## திருச்சபையைக் கட்ட உதவும் கரம்
## SUSTAINING HAND

இறுதியாக, 'கர்த்தருடைய கரம்' என்கிற பதம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இரண்டு முறை காணப்படுகிறது. 'கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது. அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்' (அப்.11:21). திருச்சபை உபத்திரவத்தினூடே சென்ற நாட்கள் அது. ஆகிலும் கர்த்தருடைய கரம் விசுவாசிகள்மேல் இருந்தது. அவர்கள் இயேசுவைப் பிரசங்கித்தபோது அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள். தேவ ராஜ்யம் வேகமாக வளர்ந்தது. அப்போஸ்தலர் 13-ம் அதிகாரத்தில் பவுலின் ஊழியத்தை எதிர்த்து நின்ற எலிமா என்ற மாயவித்தைக்காரனை கர்த்தருடைய கரம் சந்தித்தது. அவன் குருடனாய் மாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான் (அப்.13:11). ஆம், இந்த 2026ம் ஆண்டு கர்த்தருடைய கரம் திருச்சபைகளைக் கட்டி எழுப்பும். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு சபைகளில் சேருவார்கள். திருச்சபைகளையும், ஊழியங்களையும் எதிர்க்கிறவர்களை கர்த்தர் நிச்சயம் சந்திப்பார். தைரியமாக செயல்படுவோம்!

கடைசியாக சகோதரரே. தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்று எஸ்றா கூறுகிறார் (எஸ்றா 8:22). ஆகவே இந்த ஆண்டு கர்த்தரை ஜெபத்திலும், வேத வாசிப்பிலும், அவரை ஆராதிப்பதிலும், அவருக்கு ஊழியம் செய்வதிலும் இன்னும் அதிகமாய் தேடுங்கள். கர்த்தருடைய கரம் நிச்சயம் உங்கள்மேல் நன்மையாக இருக்கும் அல்லேலுயா!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்தரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# மனம் புதிதாகிறதினாலே

## Renewal of your Mind

**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**

Senior Pastor, Assembly of God Church, Vellore
Secretary - The Thamizh Pradhesa Assemblies of God

பரிபூரண ஜீவன் வாசகர்கள் யாவருக்கும் ஆண்டவராகிய கிறிஸ்துவின் நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த புதிய ஆண்டிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களுடைய குடும்பங்களுக்கு புதிய கிருபையை, புதிய நன்மையை, புதிய உயர்வுகளை, புதிய அபிஷேகத்தை கட்டளையிடுவாராக.

அப்போஸ்தலனாகிய பவுல், ரோம திருச்சபைக்கு எழுதினபோது "உங்கள் மனம் புதிதாகிறனாலே மறுரூபமாகுங்கள்" என்று எழுதியிருக்கிறார் (ரோமர் 12:2). இந்த புதிய ஆண்டிலே நம்முடைய மனது புதிதாகட்டும். குடும்பங்கள் மறுரூபமடை யட்டும்.

கீழ்க்கண்ட 10 கேள்விகளுக்கு, நேரம் எடுத்து, உண்மையாக பதிலைக் கண்டுபிடியுங்கள். நீங்களாகவே 1-5 வரை எது பொருந்துகின்றதோ அந்த மதிப்பெண்களை போட்டுக் கொள்ளுங்கள்.

(1-Never/ ஒருபோதும் இல்லை; 2-Rarely/எப்போதாவது; 3-Sometimes/சில நேரங்களில்; 4-Often/அடிக்கடி; 5-Very Often/ ரொம்ப அடிக்கடி).

1. Do you feel a close emotional connection with your spouse?

   உங்களுடைய வாழ்க்கை துணையோடு மிகவும் உணர்வு பூர்வமான நெருக்கத்தை உணர்கிறீர்களா?

2. Do you effectively express your love and care towards your spouse?

   உங்களுடைய அன்பையும், பராமரிப்பையும் உங்கள் வாழ்க்கை துணையிடம் நேர்த்தியாக வெளிப்படுத்துகிறீர்களா?

3. Do you consistently spend quality time together?

   தொடர்ச்சியாக உங்கள் வாழ்க்கை துணையோடு தரமான நேரம் செலவழிக்கிறீர்களா?

4. Are you comfortable revealing your authentic self to one another?

   உங்களுடைய உண்மையான சுயத்தை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்துவதில் உண்மையாக இருக்கிறீர்களா?

5. Do you approach and manage differences between you in a constructive and creative manner?

   உங்களுக்குள் இருக்கும் பலவிதமான வேறுபாடுகளை நேர்மறையாக, வித்தியாசமாக அணுகி கையாளுகிறீர்களா?

6. Do you genuinely respect your spouse's opinions regarding financial matters and decision-making?

   பொருளாதாரம் மற்றும் தீர்மானம் எடுத்தல் போன்ற காரியங்களில் உண்மையாக உங்கள் துணையின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கிறீர்களா?

7. Do you communicate openly and clearly with each other?

   ஒருவருக்கொருவர் வெளிப்படையாக, தெளிவாக பேசிக்கொள்கிறீர்களா?

8. Are you satisfied with the level of physical intimacy in your relationship?

   உங்களுடைய வாழ்க்கை துணையோடு உள்ள சரீர பிரகாரமான தொடர்புகளில் திருப்தியாக இருக்கிறீர்களா?

9. Do you feel a strong spiritual connection with your spouse?

   உங்களுடைய வாழ்க்கை துணையோடு ஆழமான ஆவிக்குரிய பிணைப்பை பெற்றுள்ளீர்களா?

10.How would you rate the overall quality of your Intimacy?

உங்களுடைய திருமண நெருக்கத்தின் ஒட்டு மொத்த தரத்தை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்?

- ☞ நீங்கள் 5 மதிப்பெண்கள் கொடுத்த கேள்விகளுக்கு ஆண்டவருக்கு நன்றி செலுத்தி, தொடர்ந்து அவைகளை செய்வதற்கு தீர்மானியுங்கள்.
- ☞ 3 அல்லது 4 மதிப்பெண்கள் கொடுத்த கேள்விகளுக்கு கவனம் செலுத்தி அவைகளை சிறப்பாக செய்ய தீர்மானியுங்கள்.
- ☞ 1 அல்லது 2 மதிப்பெண்கள் கொடுத்த கேள்விகளுக்கு அதிக கவனம் செலுத்தி, குறைகளை சரி செய்து முன்னேற தீவிர முயற்சி எடுங்கள்.

இந்த 10 கேள்விகளும் திருமண உறவின் 10 பகுதிகளாகும். நம்முடைய திருமண உறவை வலுப்படுத்த 10 எளிமையான ஆலோசனைகளை தருகிறேன். கவனித்து செயல்படுங்கள்.

1. Dedicate attention to nurturing the concept of "Companionship"(Gen. 2:18)
   "பொருத்தமான தோழமை" என்ற கருத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள் (ஆதி.2:18).
2. Direct your focus toward the concept of togetherness (Josh 24:15)
   சேர்ந்து செயல்படுங்கள் / சேர்ந்து இருத்தல் போன்ற கருத்துக்களின் மேல் உங்கள் கவனத்தை திருப்புங்கள் (யோசுவா 24:15).
3. Decide strongly to get connected in all aspects of your marriage (Gen. 2:24)
   உங்களது திருமண வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் எப்போதும் இணைந்திருக்க ஆழமாக தீர்மானியுங்கள் (ஆதி.2:24).
4. Determine heartily to resolve your issues before your bed time (Eph. 4:26,27)
   இரவு படுக்கைக்கு செல்வதற்கு முன் உங்களுடைய பிரச்சனைகளை சரிசெய்வதற்கு இதய பூர்வமாக உறுதியாக இருங்கள் (எபே.4:26,27),
5. Destroy every demonic stronghold which are working against your family through strong Prayer (Matt.12:29)
   உங்களுடைய குடும்பத்திற்கு விரோதமாக கிரியை செய்யும் எல்லா பிசாசின் ஆளுகைகளையும் உறுதியான ஜெபத்தின் மூலம் அழியுங்கள் (மத்.12:29).
6. Devote Quality time to be together (Gen. 26:8)
   உங்கள் கணவன்/மனைவியோடு தரமான நேரம் செலவிடுவதற்கு அர்ப்பணியுங்கள் (ஆதி.26:8).
7. Delight in deep Physical Intimacy with your Spouse (Pro.5:18,19).
   உங்கள் வாழ்க்கைத் துணையோடு உள்ள ஆழமான சரீர நெருக்கத்தில் மகிழ்ந்திருங்கள் (நீதி.5:18,19).
8. Design a strong Marriage Purpose Statement and follow it Sincerely (Phil.3:12).
   உங்களது திருமண நோக்கத்தை அழகாக வரையறுத்து, அதை உண்மையாக பின்பற்றுங்கள் (பிலி.3:12).
9. Deepen your Marital relationship through Other - Centered actions (Phil. 2:3,4)
   உங்கள் வாழ்க்கை துணையை மையப்படுத்தி செய்யும் செயல்களால் உங்களது திருமண உறவை ஆழப்படுத்துங்கள் (பிலி.2:3,4).

10.Develop your Spiritual Intimacy and Spiritual Activity

உங்களுடைய ஆவிக்குரிய நெருக்கத்தையும், ஆவிக்குரிய செயல்பாடுகளையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

இந்த ஆண்டு உங்களுடைய குடும்பத்தில் அதிக சந்தோஷம், ஆழமான சமாதானம், அளவு கடந்து புரிந்து கொள்ளுதல், உண்மையான அன்பு போன்றவற்றை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்கள் யாவருக்கும் கட்டளையிடுவாராக.

## வேதத்திலிருந்து பெருமளவு நன்மை பெற ஏழு படிகள்

தேவன் மனிதனுக்குக் கொடுத்த மிகப்பெரிய பரிசுகளில் ஒன்று பரிசுத்த வேதாகமம். ஆகவே நாம் அதை வாசிப்பதிலும், படிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த ஆண்டில் வேதத்தில் எழுதப்பட்ட செய்திகளிலிருந்து பெருமளவு நன்மை பெற இதோ ஏழு படிகள்.

**1.அங்கீகரியுங்கள் (Receive):** வேதத்தை வாசிக்கும் பொழுது அது சிறப்பாக உங்களுக்கென்றே வரும் தேவ செய்தியாக ஏற்றுக் கொள்ளுங்கள். வசனத்தை விசுவாசத்தோடும் (எபி.4:2), எல்லாச் சாந்தத்தோடும் (யாக்.1:21) ஏற்றுக் கொள்ளுங்கள். வசனத்துக்கு நடுங்குகிறவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்கள் (ஏசா.66:1.2). வேத வசனத்துக்குக் கீழ்ப்படிந்து அதற்கு அடிபணிவோர் வாழ்வில் வசனம் அற்புதங்களைக் கொண்டு வரும்.

**2.அசைபோடுங்கள் (Ruminate):** இது தான் தியானித்தல் என்பது. பசுமாடு அசைபோடுவது போல் நாமும் கேட்டதைத் திரும்பத் திரும்பச் சிந்திக்க வேண்டும். வேலைகள் மிகுதியாவதால் விசுவாசிகள் இக்கலையை இன்று மறந்து வருகின்றனர். தியானமானது இருதயத்தைக் கீழ்ப்படிதலுக்கு நேராய் நடத்துகிறது. வேலைக்கு வெளியே செல்லும்போது. காலையில் வேதத்திலிருந்து வாசித்ததை இருதயத்தில் சுமந்து செல்லுங்கள் (யோசுவா 1:8; சங்.1:2: 119:97).

**3.ஆராய்ந்து பாருங்கள் (Refer):** வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்றார் இயேசு (யோவான் 5:39). கர்த்தருடைய புத்தகத்திலே தேடி வாசிக்க வேண்டும் (ஏசா.34:16). வசனத்தை வசனத்தோடு ஒப்பிட்டுப் படிக்க வேண்டும். ஒரு பகுதியை இன்னொரு பகுதி விளக்கும். தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் பெரோயா பட்டணத்தார் தெசலோனிக்கேயரைவிட நற்குணசாலிகளா யிருந்தனர் (அப்.17:11).

**4.அப்பியாசியுங்கள் (Reform):** வெறும் அறிவு இறுமாப்பை உண்டாக்கும். அறிவு அனுபவமாக வேண்டும். அறிந்து கொண்ட சத்தியம் கீழ்ப்படிதலுக்கு நேராக நடத்த வேண்டும். வாழ்வு மறுரூபமாக வேண்டும். வேதத்தை ரசித்தால் போதாது. அதை ருசிக்கவும், அப்பியாசிக்கவும் வேண்டும்! கேட்பது. வாசிப்பது. தியானிப்பது ஆகியவற்றிலிருந்து தெளிவான கட்டளைகள் உண்டா என்று கவனியுங்கள். கீழ்ப்படியத் தாமதம் வேண்டாம். ஒவ்வொரு கீழ்ப்படிதலும் புதிய வெளிப்பாடுகளைக் கொண்டு வரும்.

**5.அகற்றுங்கள் (Remove):** வசனமென்பது விதையாகும். நமது வாழ்வே நிலமாகும். நாம் கனி நிறைந்திருக்க வேண்டுமென்பது தேவனது விருப்பம். ஆனால் நாம் கனி கொடுக்க, அகற்றப்பட வேண்டிய சில தடைகள் உண்டு. அவிசுவாசிகளின் ஐக்கியம் (சங்.1:1), உலக சிந்தை, பொருளாசை (மத். 13:22), உறவுப் பிரச்சனைகள் (1 பேதுரு 2:1.2) ஆகிய தடைகள் அகற்றப்படும்போது வேதத்திலிருந்து பெருமளவு நன்மை பெறலாம்.

**6.அறிவியுங்கள் (Relate):** வேதத்திலிருந்து கற்றுக் கொண்டவைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள் (எஸ்றா 7:10). தேக்கம் வேண்டாம். கொடுக்கவே பெறுகிறோம். உரையாடல்கள். கடிதங்கள். பராமரிப்புக் குழுக்கள் மூலம் சத்தியங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். வயல் வெளிகளில் நடக்கும் போதும், பயண வேலைகளிலும் அல்லவா இயேசு அறிவித்த சத்தியங்களில் பெரும்பாலானவற்றைப் பகிர்ந்து கொண்டார். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் (லூக்கா 6:38: நீதி. 11:25.26).

**7.ஆராதியுங்கள் (Revere) :** வசன அறிவு யாவும் நம்மை ஆராதனைக்குள் நடத்த வேண்டும். வசனத்தில் தேவனை அறிவதே தேவனது வசனத்தை ஆராய்வதின் நோக்கமாகும். இந்த அறிவினால் ஆராதனை சிறப்பாகும் (சங்.138:2).



# எழும்பிப் பிரகாசியுங்கள்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


கிறிஸ்துவுக்குள் அன்பான 'பரிபூரண ஜீவன்' வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் வாழ்த்துக்கள்! இந்த புதிய வருடத்தில் கர்த்தர் தந்த வாக்குத்தத்தத்துடன் உங்களை சந்திக்க செய்த ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். 'நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே' (எரே.29:11)."I know the plans I have for you", என்று ஆங்கிலத்தில் வாசிக்கிறோம். ஆண்டவர் நம் ஒவ்வொருவரைக் குறித்தும் பல நல்ல திட்டங்களை இப்புதிய வருடத்திற்கென்று நினைத்து வைத்திருக்கிறார். கடந்த காலத்தின் பிரச்சனைகளையும், போராட்டங்களையும், சவால்களையும் விட்டு விட்டு கர்த்தர் நமக்கென்று வைத்திருக்கும் புதிய திட்டங்களை நிறைவேற்றி, பிரகாசிக்கும்படி புதுஉற்சாகத்துடன், புதுபெலத்துடன், அனல்கொண்டு முன்னேறிச்செல்ல ஆண்டவர் கிருபை பாராட்டுவாராக!

### முன்னேறிச் செல்லுங்கள்

அப்போஸ்தலனாகிய பவுல், அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல் எதற்காய்ப் பிடிக்கப்பட்டாரோ, அதைப் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாயத் தொடர்ந்தார். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி இலக்கை நோக்கித் தொடர்ந்தார் (பிலி.3:12-14). நாமும் தேவன் நமக்காக வைத்திருக்கும் திட்டங்களை நிறைவேற்ற, பின்னானவைகளை மறந்து விட்டு ஆசையாய் முன்னோக்கித் தொடர வேண்டும். பின்னான வெற்றிகளையும் நாம் மறந்து விட வேண்டும். ஏனெனில் அவைகள் ஆவிக்குரிய பெருமையையும் மெத்தனத்தையும் கொண்டு வரும். பிரச்சனைகள் பாரமாயிருந்து முன்னேறவிடாமல் தடுப்பதுபோல், வெற்றிகளும், முன்னேற்றத்திற்கு பெரிய சவாலாகவும், எதிரியாகவும் இருக்கும்.

மாத்திரமல்ல, பெற்றுக் கொள்ளத்தக்கதாகவும் ஓட வேண்டும் (1கொரி.9:24). பந்தயத்திற்கு போராடுகிறவர்கள் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாய் இருப்பார்கள். ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்படுத்துகிறேன் என்று பவுலடியார் கூறுகிறது போல, நாமும் எல்லாவற்றிலேயும் கட்டுப்பாட்டுடனும், ஆவிக்குரிய ஒழுக்கங்களுடனும் ஓட வேண்டும். எல்லாவற்றையும் அனுபவிக்க நமக்கு அதிகாரமிருந்தாலும் எல்லாம் நமக்குத் தகுதியாயிராது, பக்தி விருத்தியையும் உண்டாக்காது (1கொரி.10:23). எனவே, தகுதியில்லாத, பக்திவிருத்தி உண்டாக்காத, உலகத்தின் ஆசை இச்சைகளால் இழுக்கப்படாமல், எல்லாவித கட்டுபாட்டுடனும், ஒழுக்கத்துடனும் நம்மைக் குறித்து தேவன் வைத்திருக்கும் திட்டங்களை நிறைவேற்றும்படி முன்னேறி செல்லுங்கள். மாத்திரமல்ல, நிச்சயத்தோடு ஓடவேண்டும் (வ.29). தேவ திட்டங்களை அறிந்து, அதை நிறைவேற்றுகிறோம் என்ற நிச்சயத்தோடு ஓடவேண்டும்.

## அனலாயிருங்கள்

நம் ஓட்டத்தில் நாம் அனலாயிருக்க வேண்டும் (வெளி.3:15,17,18,20). எலியா சோர்வுற்றிருந்தபோது, தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவருக்கு அடையையும், தண்ணீரையும் தந்து, எழுந்திருந்து போஜனம்பண்ணு: நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றார் (1இராஜா.19:5,7,15,16). சோர்வு நீங்கி அனலாக ஓடவேண்டுமென்றால், தேவன் தரும் அப்பத்தை நாம் உட்கொள்ள வேண்டும். அனலுமில்லாமல், குளிருமல்லாமல், வெதுவெதுப்பாயிருந்தால் ஆண்டவர் நம்மை வாந்திபண்ணிப் போடுவார். நம் ஓட்டத்தைக் குறித்த தெளிவான தரிசனத்தை நாம் பெற்றுக்கொண்டு அனலாக ஓடவேண்டுமானால், நம் கண்களுக்கு கலிக்கம் போடவேண்டுமென்று ஆண்டவர் நமக்கு ஆலோசனைத் தருகிறார். அப்படி செய்யும்போது அவர் நம்மோடு போஜனம் பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன் என்று எரேமியா தீர்க்கதரிசி கூறுகிறார் (15:16). இயேசுவானவர் வேதவாக்கியங்களை விளக்கி காட்டினபோது எம்மாவூர் சீஷர்களின் இருதயம் கொழுந்துவிட்டு எரிந்தது என்று நாம் லூக்கா 24:32-ல் வாசிக்கிறோம். பலிபீடத்தின் மேல் அக்கினி அவியாமல் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று ஆண்டவர் இஸ்ரவேல் மக்களுக்கு கட்டளைக் கொடுத்திருந்தார் (லேவி.6:12,13).

நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் பேசி, இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதறி, இரத்தஞ்சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைத்து, பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் கண்களை மூடுகிறவனெவனோ,

அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும் (ஏசாயா33:15-16). மேலே சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை நாம் தவிர்க்கும்போது, தேவன் நமக்கு அடைக்கலத்தையும் உயர் வாசஸ்தலத்தையும் தருவது மட்டுமல்லாமல், நமக்கான அப்பத்தையும், தண்ணீரையும் நிச்சயமாகக் கொடுப்பார். அன்றாடம் அவர் தரும் அப்பத்தை, எரேமியா தீர்க்கதரிசியைப் போல் உடனே புசித்து பெலனடைந்து, அனலாக ஓட்டத்தைத் தொடர வேண்டும்.

## எழும்பிப் பிரகாசியுங்கள்

எழும்பு, எழும்பு, சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள் என்று ஆண்டவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார் (ஏசாயா 52:1,2). தூசியை உதறிவிட்டு, கழுத்தில் உள்ள கட்டுகளை அவிழ்த்துவிட்டு எழுந்திரு என்கிறார். இவைகள் நம்மை முன்னேறவும் விடாது. பிரகாசிக்கவும் விடாது. குமாரனாகிய இயேசு கிறிஸ்து, விடுதலையாக்கினால், நாம் மெய்யாகவே விடுதலையாகி வல்லமையைப் பெற்றுக் கொள்வோம். எழும்பு, எழும்பு, பெலன்கொள், தீர்க்கன் கூறுகிறார். தத்தளிப்பின் பாத்திரத்தை உன் கையிலிருந்து நீக்கிப் போடுகிறேன் என்றும், என் உக்கிரத்தின் வண்டல்களை நீ குடிப்பதில்லை என்றும் தேவன் கூறுகிறார். நம் வாழ்வை சோர்வடையப் பண்ணின அனைத்தையும் கர்த்தர் நீக்கி, இப்புது வருடத்தில் நம்மைப் பிரகாசிக்கப் பண்ணுவார் (ஏசாயா 51:9,17,22). தூங்குகிற நாம் மரித்தோரைவிட்டு எழுந்திருக்கும்பொழுது கிறிஸ்து நம்மை பிரகாசிப்பிப்பாரென்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (எபே.5:14). கெத்சமெனே தோட்டத்தில் நித்திரை மயக்கமடைந்த சீஷரைப் போல இராமல், நாம் தூக்கத்தை விட்டு எழும்ப வேண்டும். தெபொராள், விழித்து எழும்புமளவும் கிராமங்கள் பாழாய்ப்போயின.

தெபொராள், விழித்து எழும்பி இஸ்ரவேலில் நியாயம் விசாரித்து, சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினாள். பின்பு நாற்பது வருஷம் தேசம் அமைதலாயிருந்தது (நியா.5:12,7,31). இக்கடைசி காலத்தில், பெண்களாகிய நாம் எழும்பி கர்த்தர் நமக்கென்று நியமித்திருக்கிற வேலைகளை செய்ய தீவிரிப்போமென்றால், தேசத்தில், தேவபிள்ளைகளுக்கு எதிரான யுத்தங்கள் ஓய்ந்து, அமைதியுண்டாகும்.

தேவபிள்ளைகளாகிய நீங்கள் கண்களுக்கு கலிக்கம் போட்டுக் கொண்டு தரிசனத்தோடு, இப்புதுவருடத்தில் கர்த்தர் உங்களுக்கென்று வைத்திருக்கும் நன்மையான திட்டங்களை அறிந்து கொள்ளுங்கள். பின்பு, பின்னான போராட்டங்கள், பிரச்சனைகள், தோல்விகள், வியாதிகள், சவால்கள், வெற்றிகள் யாவற்றையும் மறந்துவிட்டு, முன்னானவைகளை நோக்கி ஆசையாய்த் தொடருங்கள். இச்சை அடக்கத்தோடும், ஆவிக்குரிய ஒழுக்கங்களோடும், நிச்சயத்தோடும் ஓடுங்கள். அனலாக இருங்கள். அனலின்றி சோர்ந்து போகும் நிலை வராதபடி, தேவன் அருளும் உங்களுக்கான அப்பத்தை அனுதினமும் பெற்று புசித்து, வல்லமையை தரித்துக் கொண்டு, பெலத்தையும் பெற்றுக்கொண்டு, இவ்வருடத்தில், கர்த்தர் உங்களுக்கென்று வைத்திருக்கும் சகல வேலைகளையும் செய்து முடிக்க கர்த்தர் உங்களுக்கு கிருபை அருள்வாராக! பெண்களாகிய நாம் இக்கடைசி காலத்தில் தெபொராளைபோல எழும்பி கர்த்தர், அவருடைய ராஜ்யத்தில் நமக்குத் தந்திருக்கும் வேலைகளைச் செய்யும்போது, தேசத்தில் உள்ள காரிருள் நீங்கி, எழுப்புதல் உண்டாகும். அமைதியும் உண்டாகும். தேபொராள்களே, பாராக்குகளே, எழும்பிப் பிரகாசியுங்கள். தேவன் நியமித்த வேலைகளைச் செய்து தேசத்தை தேவனுக்கு சொந்தமாக்குவோம்!

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

### ஏ.ஜி. தலைமை அலுவலகம்

30, நாவலர் நகர், மதுரை–625 016. போன் : 0452 4200664



# ஒபதியா தீர்க்கதரிசன புத்தகம்

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University,

Asst.Superintendent, The Thamizh Pradhesa Assemblies of God

வேதாகமத்தில் அறுபத்தாறு புத்தகங்கள் உள்ளன. அவை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இருபிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் எல்லா புத்தகங்களுமே பத்திகளாகப் (Paragraph) பிரிக்கப்பட்டிருந்தன. கி.பி.1600-ம் ஆண்டில்தான் பத்திகள் முறைப்படுத்தப்பட்டு, இன்று நம் கையில் உள்ளதுபோல் **'அதிகாரங்கள்' 'வசனங்கள்'** என வடிவமைக்கப்பட்டன.

பழைய ஏற்பாட்டிலுள்ள முப்பத்தொன்பது புத்தகங்களிலும் மொத்தம் 929 அதிகாரங்கள் உள்ளன. புதிய ஏற்பாட்டிலுள்ள இருபத்தேழு புத்தகங்களிலும் 260 அதிகாரங்கள் உள்ளன. ஆக, முழு வேதாகமத்திலும் 1189 அதிகாரங்கள் உள்ளன.

வேதாகமத்திலுள்ள அறுபத்தாறு புத்தகங்களில் ஒரே ஒரு அதிகாரத்தையுடைய புத்தகங்கள் மொத்தம் ஐந்து; ஒபதியா, பிலேமோன், 2 யோவான், 3 யோவான், யூதா என்பவைகளே.

ஒபதியா, ஒரே ஒரு அதிகாரத்தையுடைய பழைய ஏற்பாட்டின் மிகச்சிறிய புத்தகம் ஆகும். இதில் மொத்தம் 21 வசனங்களே உள்ளன. இப்புத்தகத்தைப் பற்றி இங்கு காண்போம்.

### ஒபதியா என்ற தீர்க்கதரிசி:

புறஜாதிய தேசமாகிய ஏதோமியர்மேல் தேவனுக்கிருந்த கோபத்தையும், அதனால் தேவ நியாயத்தீர்ப்பாய் வரவிருந்த அழிவைப்பற்றியும் தனது புத்தகத்தில் ஒபதியா என்ற தீர்க்கன் தீர்க்கதரிசனம் உரைக்கிறான்.

ஏதோமியருக்கு எதிரான தீர்க்கதரிசன புத்தகமாய் இருந்தாலும் பிரதானமாக யூதா தேசத்துக்கு ஆறுதலாக சொல்லப்பட்ட தீர்க்கதரிசன பதிவே இப்புத்தகம் ஆகும்.

இப்புத்தகத்தை எழுதியவர் ஒபதியா என்னும் தீர்க்கதரிசியாவார். ஒபதியா என்பதற்கு "கர்த்தருடைய தாசன்" என்னும் பொருள் உண்டு. இப்புத்தகம் எப்பொழுது எழுதப்பட்டது என்று திட்டமாகத் தெரியவில்லை. எனினும் எப்போதோ ஒருமுறை சத்துருக்கள் யூதாவிலே படையெடுத்து வந்தபோது ஏதோமியர் யூதாவின் ஜனங்களுக்கு எதிராக செயல்பட்டனர், எதிர்த்து நின்றனர், காட்டிக்கொடுத்தனர் மற்றும் யூதாவை கொள்ளையடித்தனர். இந்த பின்னணியத்தை மனதில்கொண்டே ஒபதியா இப்புத்தகத்தை எழுதினார்.

### யூதாவுக்கு எதிராக சத்துருக்கள் எழும்பி வந்த பல்வேறு சந்தர்ப்பங்கள்:

- கிமு 926ல் ரெகொபெயாம் ஆண்ட காலத்தில் எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் படையெடுத்து வந்தது, (1இரா. 14:25-26).
- யோராமின் காலத்தில் (கிமு848-841) அரேபியர்களும் பெலிஸ்தியரும் யூதாவை முற்றுகையிட்டனர்.
- அமத்சியாவின் காலத்தில் கிமு 790ல் இஸ்ரவேலரின் ராஜாவாகிய யோவாஸ் செய்த முற்றுகை, (2இரா. 14:13,14).
- எசேக்கியாவின் ஆட்சிக்காலத்தில் (கிமு 701) அசீரியா ராஜாவாகிய சனகெரிப் இட்ட முற்றுகை, (2இரா.18:13).
- கிமு 605 -586ல் பாபிலோனிய படையெடுப்பு, (2இரா. 24, 25).

மேலே கண்ட இரண்டாவது படையெடுப்பை மனதில் கொண்டுதான் இந்த புத்தகத்தை ஒபதியா எழுதினார் என உறுதிப்பட கூறுகிறார்கள். அப்படியானால், இதன்படி கிமு 840ல் இப்புத்தகம் எழுதப்பட்டது எனலாம்.

**ஏதோமியரும் இஸ்ரவேலரும் :**

ஆதியாகமம் 25:19-24; 27:1-28:9 வசனங்களின்படி ஏதோமியரின் தகப்பனாகிய ஏசாவுக்கும் இஸ்ரவேல் கோத்திரங்களின் தகப்பனாகிய யாக்கோபுக்கும் இடையே நிலைத்திருந்த நீண்ட நாள் போட்டியும் பகையும் இங்கு பிரதிபலிக்கிறது எனலாம். ஆதியாகமம் 33ல் இவ்விரு சகோதரர்களும் ஒப்புரவானபோதும் வேதாகம சரித்திரத்தில் இவர்களின் சந்ததியாரின் பகை உணர்ச்சி பலமுறை போராக வெடித்தது என்பதையும் வாசிக்கிறோம் (எண்.20:14-21; 1சாமு.14:47; 2சாமு 8:14; 1இரா.11:14-22) தொன்றுதொட்டு வந்த இப்பகைமையின் அடிப்படையில்தான் ஏதோமியர் எருசலேமின் அழிவைக் கண்டு சந்தோஷப்பட்டனர் எனக் காண்கிறோம்.

யூதாவின் அழிவில் மகிழ்ச்சியடைந்த ஏதோமின்மேல் வரும் நியாயத்தீர்ப்பை பற்றியும் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாகிய யூதாவுக்கு கர்த்தருடைய நாளில் வரப்போகும் விடுதலைப்பற்றியும் ஒபதியா தீர்க்கதரிசனம் உரைத்தார்.

ஏசாவும், யாக்கோபும் ஈசாக்கின் மக்கள்; ஒரே கர்ப்பத்தில் பிறந்த இரட்டைப்பிள்ளைகள். ஏசா ஏதோமியரின் தகப்பன். இவன் நிறம் சிவப்பு; எனவே ஏதோம் என்ற பெயரும் இவனுக்கு உண்டு. இந்தப் பெயராலேயே அவனது சந்ததியினர் ஏதோமியர் என்று அழைக்கப்பட்டனர்.

ஏசாவின் சகோதரன் யாக்கோபு. பின்பு இஸ்ரவேல் என்று பெயர் மாற்றம் பெற்றான். இவன் சந்ததியினர் இஸ்ரவேலர் என அழைக்கப்பட்டனர். இந்த இஸ்ரவேலருக்கு 'யூதர்' 'எபிரெயர்' என்ற பெயர்களும் உண்டு. பிறப்பதற்கு முன்பு தாயின் கர்ப்பத்திலேயே இந்தப் பிள்ளைகள் ஒனறோடொன்று மோதிக்கொண்டிருந்தன (ஆதி.25:22). பிறப்பிலிருந்தே அண்ணன்-தம்பி பகை என உருவெடுத்து, குடும்பப் பகையாய் வளர்ந்து, பிற்காலத்தில் இவர்களிருவரும் ஏதோம், இஸ்ரவேல் என இருவேறு தேசங்களாய் உருவெடுத்தபோது, பகைமை உணர்வு மாறாமல், தேசப்பகையாய் மாறிற்று (ஆதி.25:19-34).

ஆரம்பத்தில் மோதல் போக்கில் நடந்துகொள்வோர், ஆண்டவருடன் நெருங்கி வாழ்ந்தால்; சுபாவங்கள் மாற பகைமையும் மறையும். இது கணவன் மனைவி உறவிலும், சகோதர சகோதரிகள் பாசத்திலும், அண்டை அயலார் உறவிலும் முற்றிலும் உண்மையே.

ஏதோமியனை அருவருக்காயாக, அவன் உன் சகோதரன் (உபா.23:7) என்று யூதருக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. அதன்படியே, ஆண்டவரோடு நெருங்கி 'இஸ்ரவேல்' எனப் பெயர் மாற்றம் பெற்ற யாக்கோபு, வெகுவாய் மாறியிருந்தான். ஆனால் ஏத்தியர் குலத்தில் தனக்குப் பெண்கொண்ட ஏசா, தனது பெற்றோருக்கு மனநோவாயிருந்ததுடன், தன் சகோதரன் யாக்கோபின்மேலும் அவன் சந்ததியாராகிய இஸ்ரவேலரின் மேலும் பரம்பரைப் பகையாக விரோதம் கொண்டிருந்தான். இடையிடையே இவர்களுக்குள் ஏற்பட்ட சமரசங்கள் (ஆதி.33;35:27-29). நீண்ட கால ஒப்புரவாகுதலின் பலனைத் தரவில்லை. ஏனெனில், அது ஆண்டவரை மையப்படுத்தாத ஒப்புரவாகுதல் சந்தர்ப்பங்களாகும். இருபது ஆண்டுகளுக்குப்பின், தன் தம்பியை வரவேற்கச் சென்ற ஏசா 400 பேர் கொண்ட பெரும் படையுடன் சென்றான் (ஆதி.33). பின்பு தங்கள் தகப்பனுடைய மரணத்தின்போது இருவரும் சந்தித்துக்கொண்டனர் (ஆதி.35:27-29). இவை குடும்ப சந்திப்புகளாகவும், சமூக சம்பிரதாயங்களுமாகவே அமைந்துவிட்டன. உள்ளான உறவினை வளர்க்க உதவவில்லை.

**ஏதோமியரின் தேசம்:**

இயற்கை எழில்மிக்க மலைதேசம்; சவக்கடலுக்குத் தெற்கே அரேபியாவைத் தனது எல்லைகளில் ஒன்றாகக் கொண்டிருந்த ஏதோம் தேசம், சேயீர்; மலைப்பகுதியிலிருந்தது. நீரோடைகள், ஆறுகள் மற்றும் மலை வளங்களுடன் பசுமை வழிச்சாலைகளைத் தன்னகத்தேக் கொண்டிருந்தது. சுற்றிலும் அரண்போன்ற மலைகளின் பாதுகாப்பைத் தன்னகத்தே கொண்டிருந்தபடியால், யாரும் என்னை அசைக்க இயலாது எனப் பெருமையுடன் இவர்கள் வாழ்ந்து வந்தனர். யோராம் என்னும் யூதாவின் ராஜாவின் காலத்தில் (கி.மு.848-841) யூதா தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு சுதந்தரமாய் வாழ்ந்து வந்தனர் (2நாளா.21:8-10). இந்தக் காலக்கட்டத்தில்தான் பெலிஸ்தியரும், அரபியரும் சேர்ந்து யூதா தேசத்துக்கு எதிராக படையெடுத்து வந்தனர். யூதா முறியடிக்கப்பட்டது. யூதாவின் தோல்வியைக் கண்டு ஏதோமியர் கைகொட்டி மகிழ்ந்தனர். யுத்தகாலத்தில் பகைஞருக்குத் தப்பி அடைக்கலம் தேடி தங்களிடம் ஓடி வந்த யூதரைப் பிடித்து எதிரிகளிடம் ஒப்படைத்தனர்; கொடூரத்தின் எல்லை இது!

**ஏதோமியரின் பிரதான பாவங்கள்:**

❖ தங்களது பாதுகாப்பான சூழ்நிலை குறித்த பெருமை. ஆண்டவருக்கு மேலாக தங்களை உயர்த்தினர்.

❖ யூதாவின் அழிவில் அவர்களது துன்பத்தைக் கண்டு பூரித்தனர். யூதாவை எதிர்த்து வந்த எதிரிகளுடன் சேர்ந்துக்கொண்டு, தப்பி அடைக்கலம் கேட்டு தங்களிடம் ஓடி ஒளிந்துகொள்ள வந்த யூதாவின் ஜனங்களை அவர்களது எதிரிகளிடம் பிடித்துக்கொடுத்தனர்.

தேவனைவிட தங்களை உயர்த்திய பாவம்.

தேவ ஜனங்களை மனிதாபிமான ஈரமில்லாமல் நடத்திய கொடூரம்.

இவ்விரண்டு பாவங்களும் தேவனுக்கு விசனமாயிருந்தது.

ஏதோமியரின் பாவத்தை தனது வார்த்தைகளில் ஆமோஸ் கீழ்க்கண்டவாறு தீர்க்கதரினம் உரைக்கிறான்:

மேலும் ஏதோமியருடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நான் அவன் ஆக்கினையைத் திருப்பமாட்டேன். அவன் தன் சகோதரனைப் பட்டயத்தோடே தொடர்ந்து, தன் மனதை இரக்கமற்றதாக்கி, தன் கோபத்தினாலே என்றைக்கும் அவனைப் பீறிப்போட்டு , தன் மூர்க்கத்தை நித்திய காலமாக வைத்திருக்கிறானே.

எசேக்கியேலும் தனது தீர்க்கதரிசனங்களில் ஏதோமியரின் பாவத்தை குறிப்பிடுகிறார் (எசே.35:15;36:5): முழு உலகையும், சகல ஜாதிகளையும் நியாயந்தீர்க்கிற கர்த்தர் தமது நாமத்திற்காகவும் தாம் தெரிந்துகொண்ட ஜனத்திற்காகவும் வைராக்கியம் கொண்டு செயல்படுகிற தேவனாயிருக்கிறார். எனவே தமது தீர்க்கதரிசியாகிய ஒபதியாவுக்கு கி.மு 840-ல் கர்த்தர் தமது தரிசனத்தைத் தருகிறார்.

**ஒபதியாவின் செய்தியில்:**

- ஏதோமுக்குத் தேவ தண்டனையாக அழிவு வரும்.
- கர்த்தரின் மக்களாகிய யூதருக்கு விடுதலை வரும்.
- யூதரின் பகைஞர் முறியடிக்கப்படுவர்.
- கடைசி நாட்களில் தேவன் தமது சிங்காசனத்தை எருசலேமில் ஸ்தாபிப்பார்.

**இருபிரிவுகளிலான இருபத்தொரு வசனங்கள்:**

முதல்பிரிவு 1:1-16

1. தங்களது பாதுகாப்பான நாட்டைக்குறித்தும், அதில் இருந்த செல்வச்செழிப்பைக் குறித்தும் ஏதோமியருக்குப் பெருமை, இதற்கான தேவ நியாயத்தீர்ப்பு வரும்; அவர்களுக்குரியவை அனைத்தும் வாரிக்கொள்ளப்படும் (1-9).
2. தேவன் ஏதோமை நியாயந்தீர்ப்பதற்கான ஆறு காரணங்கள்:(10-16). (அருவருக்கப்படும் பாவங்களாக இவற்றை ஒபதியா கூறுகிறார்).

ஏதோம் ஜனங்கள் யூத ஜனங்களுக்கு எதிராய் செய்த செயல்கள் இங்கு தரப்பட்டுள்ளது.

- யாக்கோபுக்குச் செய்த கொடுமை, (வச 10).
- எதிரிகளுடன் கூட்டுச்சேர்ந்து, யூதாவுக்கு எதிர்த்து நின்றது, (வச 11).
- யூதா புத்திரரின் இக்கட்டு நாளில் அதைக்குறித்து சந்தோஷப்பட்டது, (வச 12).
- யூதா ஜனங்களின் ஆபத்து நாளில் எதிர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்களைக் கொள்ளையிட்டது, (வச 13).
- யூதா ஜனங்களில் தப்பி ஓடினவர்களைச் சங்கரித்து, இன்னும் தப்பி ஓடிய யூதாவின் ஜனங்களை காட்டிக்கொடுத்துத் துரோகச் செயலில் ஈடுபடல், (வச 14).
- யுத்த காலத்தில் யூதாவின் ஜனங்கள் தங்கள் ஆலயத்தையும் தேசத்தையும் விட்டு ஓடிப்போனபின்பு. கர்த்தரின் பரிசுத்த ஸ்தலமாகிய ஆலயத்தில் அமர்ந்து மதுபானம்பண்ணி அதைத் தீட்டுப்படுத்தினர், (வச 16).

**இரண்டாம் பிரிவு (1:17-21):**

யூதாவின் ஜனங்களுக்கு வாக்குத்தத்தமாகிய தேவனுடைய செய்தி

- தேவன் உங்களை விடுவிப்பார் (17-18).
- தேவன் உங்கள் பகைஞரை முறியடிப்பார் (19-20).
- கடைசி நாட்களில் தேவன் எருசலேமில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்து ஆளுகை செய்வார்.

ஒபதியா உரைத்த தீர்க்கதரிசனத்தின்படியே ஏதோமியருக்கு பிற்காலத்தில் நடந்தது.

**சரித்திரம் தரும் உண்மைகள்:**

- ஒபதியாவின் தீர்க்கதரிசனத்தின்படியே, கி.பி 100-ம் ஆண்டிற்குப்பின் ஏதோம் அழிந்து, அது இருந்த இடமும் அறியப்படாமற்போயிற்று.
- தேவன் கடைசி நாட்களில் தமது சிங்காசனத்தை சீயோன் மலையின்மேல் ஸ்தாபிப்பார் என்பதற்கு அடையாளமாக கி.பி.1948-ம் ஆண்டில் மே மாதம் 17ம் தேதியில், இஸ்ரவேல் ஒரு தனி தேசமாக உருவெடுத்துவிட்டது.

**ஒபதியா புத்தகம் நமக்குத் கற்றுத்தரும் பிரதான போதனைகள்:**

- ❖ பெருமையைத் தவிர்த்து தாழ்மையுடன் நடந்துகொள்ளுங்கள்.
- ❖ மோதல் போக்கை கைவிட தேவனோடு நெருங்கி வாழுங்கள். அது, மனிதரோடு நல் உறவைத்தரும்.
- ❖ மனித நேயத்துடன் நடந்து, கொடிய எண்ணங்களை மனதிலிருந்து எடுத்துப்போட்டு, இரக்கமற்ற செயல்களை தவிர்த்திடுங்கள்.
- ❖ சொந்த சகோதரனுக்கு உதவி செய்யுங்கள். திக்கற்ற பிள்ளைகளுக்கு அடைக்கலமும் ஆதரவும் தாருங்கள்.
- ❖ நமது ஒரே நோக்கமும் எதிர்பார்ப்பும், நமது இரட்சகரின் வருகையும், இவ்வுலகில் அமையப்போகும் அவரது நீதியின் ஆளுகையுமாயிருக்கட்டும்.

பழைய ஏற்பாட்டின் மிகச்சிறிய இப்புத்தகம் தரும் மிகப்பெரிய சத்தியங்களை அனுதினமும் மனதிற்கொண்டு செயல்படுவோமாக.



## ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# விதைப்பும் அறுப்பும்

பெலிஸ்தர் தேசத்தில் கடுமையான பஞ்ச நாட்கள். ஈசாக்கு கையில் இருக்கும் கொஞ்சம் விதை தானியத்தை விசுவாசத்தோடு விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். அவன் நூறு மடங்கு பலன் பெற்றான். விதைப்பையும் அறுப்பையும் குறித்து வேதம் கூறும் ஆலோசனைகளைக் காண்போம். விதைப்பும் அறுப்பும் மாறாத பிரமாணம்; விதைக்கவே தேவன் விதையை தருகிறார்; விதைத்தால் மட்டுமே தேவன் விளையச்செய்வார்; பலனை பெற முடியும்.

### எங்கு விதைக்க வேண்டும்?

முதலாவது தேவசமூகத்தில் விதையுங்கள். உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு (நீதி.3:9). உங்கள் தசமபாக காணிக்கைகளை நீங்கள் உங்கள் சபைக்கே செலுத்துங்கள் (1 கொரி.3:6-9; 9:11) என்ற வசனத்தின்படி உற்சாகமாய் கொடுங்கள். ஏனென்றால் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி.9:7). உங்கள் பெற்றோருக்கு உதவி செய்யுங்கள். உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக (யாத்.20:12). சமுதாயத்தில் உள்ள ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள். நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும் போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், (லேவி.19:9). அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக (லேவி.19:10; நீதி.19:17; கலா.2:10). அரசாங்கத்திற்கு தவறாமல் உங்கள் வரியை செலுத்துங்கள். மாற்கு 12:17இல் இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்.

### விதைப்பின் பலன்

விதைக்கிறவர்களை கர்த்தர் வானத்தின் பலகணிகளைத் திறந்து ஆசீர்வதிப்பார் (மல்.3:10). விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார் (2கொரி.9:10).

பல மடங்கு பலனை அடையச் செய்வார். ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான்; (ஆதி.26:12).

கெம்பீரமான அறுவடையைத் தருவார். சங்.126:5,6-ல் கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான் என்ற வேத வசனத்தின்படி நம்மை கர்த்தர் ஆசீர்வதித்து பெருகப் பண்ணுவார். முடிந்தளவு சம்பாதி, முடிந்தளவு சேமி, முடிந்தளவு கொடு என்பதே ஜான் வெஸ்லி என்ற மாபெரும் ஊழியரின் அறைகூவல். உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் (பிரசங்கி 11:1) என்ற வசனத்தின்படி தேவராஜ்யத்திற்காக விசுவாசத்தோடு விதையுங்கள். தேவன் சம்பூரண ஆசீர்வாதங்களால் உங்களை செழிக்கச் செய்வார்

Rev.சாமுவேல் ஜெபராஜ்



# ஜெபிக்கும் திருச்சபை



**அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2:42)**

**திருச்சபை உதயமானதே ஒரு ஜெப அறையில்தான்** - அப்.1:14

**திருச்சபை வளர்ந்ததும் ஜெபத்தினால்** - அப்.9:31

**திருச்சபை உயர்ந்தது ஜெபத்தினால்** - அப். 4:4.

**திருச்சபை ஜெபத்தினால் முன்னேறியது** - அப்.6:7; 16:5

**திருச்சபை ஜெபத்தினாலேயே உலகைக் கலக்கியது** - அப்.17:6

**திருச்சபையின் ஜெபத்தினால் இடம் அசைந்தது** - அப்.4:31

**திருச்சபையின் ஜெபத்தினால் புதிய வாசல் திறக்கப்பட்டது** - அப்.12:10; 5:19

**திருச்சபை ஜெபத்தின் வல்லமை, சிறைச்சாலையை அசைத்தது** - அப்.16:26

**திருச்சபை ஜெபத்தினால் பரலோக வாசல் திறந்தது** - அப்.7:55,56

**திருச்சபையின் ஜெபம், தேவ தூதனை இறங்கி வரச்செய்தது** - அப்.12:5,7;10:2

**திருச்சபை, ஜெபித்து தீர்மானம் எடுத்தது** - அப். 1:25;26.

**திருச்சபை, ஜெபத்திற்கு முதலிடம் கொடுத்தது** - அப்.6:4

**திருச்சபை, ஜெபத்தின் வல்லமையை நன்கு அறிந்திருந்தது** - அப். 4:9-31.

**திருச்சபை, ஜெபத்தினால் விளையும் ஆசீர்வாதங்களை அனுபவித்தது** - அப்.2:46; 4:31-35.

**திருச்சபை, ஜெப ஐக்கியத்தைக் காத்துக்கொண்டது** - அப்.2:44-46; 4:32.

**திருச்சபை, ஜெபத்தினால் தரிசனம் பெற்றிருந்தது** - அப்.10:2,3; 16:9.

**திருச்சபை, ஜெபத்தினால் ஊழியத்தை நிறைவேற்றியது** - அப்.6:6-8.

**திருச்சபை, ஜெபத்தினால் வாக்குத்தத்தம் நிறைவேறக்கடவது** - அப்.2:1-4.

**திருச்சபை, ஜெப நேரத்தில் ஒரு ஒழுங்கைக் கடைபிடித்தது** - அப்.3:1

**திருச்சபை, ஜெபத்தில் தேவ மகிமையை வெளிப்படுத்தியது** - அப்.7:55.

**திருச்சபை, ஜெபத்தினால் தடைகளைத் தகர்த்தது** - அப். 4:18,31; 5:40,41,

**திருச்சபை ஜெபத்தினால் பிசாசின் கிரியைகளை நிர்மூலமாக்கியது** - அப்.13:8-11.

**திருச்சபை, ஜெபத்தினால் அநேக அற்புதங்களை கண்டது** - அப்.6:8; 8:6,7;2:43.

**திருச்சபை, ஜெபத்தினால் தேவ நாமத்தை மகிமைப்படுத்தியது** - அப்.4:21; 19:17

**திருச்சபை, ஜெபத்தினால் சரியான திசையில் பயணித்தது** - அப்.16:6-8

**திருச்சபை, ஜெபத்தினால் தடுமாறாமல் முன்னேறிச் சென்றது** - அப். 16:9-16.

**திருச்சபை, ஜெபத்தினால் நற்சாட்சியை காத்துக்கொண்டது** - அப். 2:32; 4:13

**திருச்சபை, ஜெபத்தினால் கிருபையில் வளர்ந்து பெருகினது** - அப். 4:23.

**Rev. L.ஜோசப்,**
(முழங்கால் யுத்தம்)



# மோசேக்களை எழும்பும்


## Rev.கலை தேவதாசன்

இயக்குநர், வடமேற்கு மிஷன் இலாக்கா


TAMIL DISTRICT MISSIONS
India and beyond...

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? **புறப்பட்டுப் போங்கள்** என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு என்று கர்த்தர் சொன்னபோது விசுவாசித்து கீழ்படிந்த மோசேக்கள் இன்றும் தேவை. (யாத்.14:15) மோசே இம்மாபெரும் பணி செய்ய அழைப்பு பெற்றபோது தயங்கியவன்தான். நான் எம்மாத்திரம்? என்றான். (யாத்.3:11) அவர்கள் என்னை நம்பார்கள், என் வாக்குக்குச் செவிகொடார்கள் (யாத்.4:1). நான் வாக்குவல்லவன் அல்ல, திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்றான் (4:10) யாரையாகிலும் அனுப்பும் என்றான் (4:3) இத்தனை சாக்குப் போக்குகளைச் சொன்னபோதும், மோசே நீ தான் எனக்கு வேண்டும் என்பதில் கர்த்தர் உறுதியாக இருந்தார். மோசே கர்த்தரை விசுவாசித்தான். கீழ்படிந்து அம்மாபெரும் திருப்பணிக்கு தன்னை அர்ப்பணித்தான் என்பது மட்டும் செய்தியல்ல, அவன் இப்பொழுது தனது ஜனங்களுக்கு, ‘புறப்பட்டு போங்கள்’ என்று சொல்ல வேண்டும், கட்டளையிட வேண்டும். அதையும் சொல்லும் அளவு அவனது விசுவாசம் படிப்படியாக வளர்ந்தது. தேவனைக்குறித்த வெளிப்பாட்டிலும் வளர்ந்தான்.

முன்னே சமுத்திரம், பின்னே பார்வோனின் சேனை துரத்திக் கொண்டிருக்கும் அபாயம், அந்த கலவரமான சூழ்நிலையில், தனது ஆவிக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி **புறப்பட்டுச் செல்லுங்கள்** என்று மோசே கட்டளையிட வேண்டும் (யாத்.14:15).

இன்றைக்கும் தனக்கு கையளிக்கப்பட்டிருக்கிற சபையாரிடம் “புறப்பட்டுச் செல்லுங்கள்” என்று தைரியமாகச் சொல்லும் மோசேக்கள் தேவை. மோசே போன்ற மேய்ப்பர்கள் தேவை.

காரணங்களைச் சொல்லி சோர்வின் பள்ளத்தாக்கில் இருந்த (யாத்.14:2) கேளிக்கை மற்றும் பொழுதுபோக்குக்கு அடையாளமான சமுத்திரக்கரையிலிருந்த (14:2) இஸ்ரவேல் புத்திரரை புறப்பட்டுச் செல்ல மோசேக்குத் துணிவு வேண்டும். ஏற்கனவே பார்வோனின் அச்சுறுத்தல்களினால் பயந்து முறுமுறுத்திருந்த மக்களை கடலுக்குள் இறங்கி முன்னேறிச் செல் என்று சொல்வது எவ்வளவு கடினம்? அன்று மோசே துணிந்து, விசுவாசித்து ஜனங்களை முன்னேறிச் செல்ல கட்டளையிட்டான். அற்புதம் நடந்தது. இன்றும் அதே போன்று மோசேக்கள் தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டியெழுப்ப தேவை.

ஏனென்றால் இன்றும் அதே சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். இக்கட்டான இக்காலத்தில் விசுவாசிகளின் பயம் அகற்றி சமுத்திரத்திற்குள் இறங்கி முன்னேறிச் செல்ல கட்டளையிட துணிந்திடுவோம். அற்புதம் நடக்கும், நமது தேசத்தாரும், சபையாரும் சமுத்திரத்தின் ஊடாக நடந்து வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிப்பார்கள்.

புதிய வருடத்தின் ஆசீர்வாதங்களை மட்டுமல்ல, இவ்வுலகத்தில் அவர்கள் ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தையும் நிறைவேற்றும் ஆசீர்வாதங்களைச் சுதந்தரிப்பார்கள்.

## I. மோசேக்களின் அவசியம்

1:1 ஜனங்கள் அன்று எகிப்திலே பட்ட துயரம் சொல்லிமாளாது. கொடூரமான ராஜாவின் ஆட்சியின் கீழ் அந்த யூதர்கள் இருந்தார்கள். அவன் எல்லோருக்கும் பொதுவான ராஜாவாக, தலைவனாக இல்லாதபடி பட்சபாதம் உள்ளவனாக, சிறுபான்மையராய் இருந்த இஸ்ரவேலரின் மேல், பொறாமையோடும், அவர்களை ஒடுக்குவதற்கான அனைத்து தந்திரமான சட்டதிட்டங்களை போடுகிறவனாயும் இருந்தான் (யாத்.1:8-12).

1:2 ஆயினும் அவர்கள் ஒடுக்கப்பட்டதினால் குன்றிப் போகாமல் பெருகினார்கள். எனவே எகிப்தியரின் எரிச்சலின் பார்வை மற்றும் கொடூரமான வேலையினாலும் இஸ்ரவேலரின் வாழ்க்கையே கசப்பானது (1:11-14).

1:3 அதுவுமல்லாமல் பிறக்கும்போதே ஆண்பிள்ளைகளைக் கொலை செய்ய உத்தரவிட்டான் கொடூரன் பார்வோன் (1:16).

1:4 அச்சூழ்நிலையில் இஸ்ரவேல் புத்திரர், அடிமைத்தனத்தினால் முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. கர்த்தர் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தது மட்டுமல்ல, தேவன் அவர்களை கண்ணோக்கினார், நினைவுகூர்ந்தார் (2:23-25). அதனால் கர்த்தர் ஒரு மீட்பரை எழுப்பினார் ஆம் மோசேயை எழுப்பினார் (2:1-10).

1:5 மோசேயை பார்வோனின் அரண்மனையில் வளர கர்த்தரே அநுக்கிரகம் செய்தார் (3:5-10). அதன் பலனாக அவன் வாக்கிலும் செய்கையிலும் வல்லவனான் (அப்.7:22). அவன் பெரியவனானபோது அவன் செய்த தவறினிமித்தம் பார்வோனுக்குப் பயந்து மீதியான் தேசம் ஓடிப்போனான். (அப்.7:29). அவனது விசுவாசம் இப்போது வளர்ந்ததால் எகிப்தின் வாழ்க்கையை வெறுத்து, தனது ஜனங்களுக்காக வாழ அர்ப்பணித்தான் (எபி. 11:23-27).

1:6 40 வருடங்களில் எகிப்தில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர். அடுத்த 40 வருடங்கள் மீதியான் தேசத்தில், சுற்றித்திரிந்தான். இப்பயிற்சிதான் அடுத்த 40 வருட வனாந்திர வாழ்க்கையில் வாழும்படி அவனுடைய சரீரம் பக்குவப்பட்டது.

1:7 தேவ பர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்த மோசேக்கு, எரிந்து சாம்பாலாகாமல் பசுமையாய் இருந்த முட்செடி மூலம் தரிசனம் கொடுத்து, கர்த்தர் தமது கனமான ஊழியத்திற்கு அழைத்தார். 'எனது மீட்பின் பணிகளை யாருடைய ஒத்தாசையின்றியும் செய்ய என்னால் முடியும். ஆயினும் மனிதனாகிய, மோசே நீ அதை முன்னின்று செய்ய வேண்டும், நீதான் எனக்கு வேண்டும்.' என்கின்ற செய்தியை, இயற்கைக்கு அப்பாற்பட்ட அந்த அற்புத செயல் மூலம் மோசேக்கு கர்த்தர் உணர்த்தினார்.

## இக்கால ஒப்பீடு

1:8 அன்றும் இன்றும் ஒரே வகை ஊழியம் தான் செய்யப்பட்டு வருகின்றது.

1:9 அன்று கொடூரமான பார்வோனின் கைகளில் இருந்து ஜனங்களை விடுவித்து, இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசம் நோக்கி நடத்த வேண்டியிருந்தது.

1:10 இன்றும் அதைப் போலவே ஜனங்கள் பிசாசின் கீழ் அடிமைப்பட்டு நொந்து போனவர்களாக இருக்கின்றனர். (மத்.9:36-38) மோசேயின் ஊழியம் போல, பிசாசின்கீழ் அடிமைப்பட்டிருக்கிற மக்களை விடுவித்து, இருளில் இருந்து

வெளிச்சத்திற்கு கொண்டு வரும் ஊழியமே இன்று நமக்கும் கொடுக்கப் பட்டிருக்கிறது (அப்.26:18).

1:11 புதிய ஏற்பாட்டு ஊழியர்கள் அனைவரும் மோசே போன்று செயல்பட வேண்டியவர்கள்தான்.

1:12 எகிப்தை விட்டுவிட விருப்பமற்று இருந்த மக்களை எகிப்திலிருந்து அழைத்து, ஒரு புதிய வாழ்க்கை முறைக்கு திருப்பிவிடுவது அன்றைய மோசேயின் பணி. இன்றும் நம்முன் இருக்கின்ற அதைப் போன்ற சவால்மிக்க பணி செய்யும் மோசேக்கள் தேவை.

மோசேயும் தேவனை நோக்கிப் பார்க்க பயந்தவன்தான் ஆனால் (யாத்.3:6) அதே மோசே அவரது நாமத்தை அறிந்தபின் (3:13) விசுவாசிக்கத் துவங்கினான். எந்த ஜனங்கள் நம்பமாட்டார்கள் என்று நினைத்தாரோ (4:1) அதே ஜனங்கள் கர்த்தரின் செயல்களையும், மோசே மூலம் செய்யப்பட்ட செயல்களையும் கண்டபோது ஜனங்கள் விசுவாசித்தார்கள்(4:31). தனது சொல்லுக்கு கிடைத்த மதிப்பு அவனது விசுவாசத்தை பன்மடங்கு அதிகரிக்கச் செய்தது. எந்த பார்வோன் முன்பு போக பயந்தானோ அதே பார்வோன் முன்பு ஆரோனுடன் இணைந்து நின்றான் (யாத்.5:1).

ஜனங்களை விடுவிப்பது கர்த்தர்தான் (3:16,17) தான் அந்த **நல்ல செய்தியைச் சொல்லி** ஜனங்களை கர்த்தரை விசுவாசிக்கவும், கீழ்படியச் செய்வதும் தான் **தனது ஊழியம்** என மோசே கண்டு கொண்டான். அதன்பின்பு எந்த ஒரு இடத்திலும் அவன் பயந்த வரலாறு இல்லை.

- இன்றைக்கு நமக்குமுன் இருக்கிற பார்வோன், கொடிய சட்டங்கள், பிசாசின் நேரடியான தாக்குதலினால் இந்த கனமான ஊழியத்தை உள்ளூரிலும் (Local Mission) வெளியூரிலும் (Global Mission) எழும்பிச் செய்வதற்கு மோசேக்கள் தயங்குகிறார்கள்.
- புதுப்புது காரணங்கள் கூறி தப்பிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் ஒருவர் மோசே போன்று எழும்பும்போது தான் விடுவிக்கப்படுவதுமின்றி, (அப்.26:18) தனக்கு கொடுக்கப்படுகின்ற மக்களையும் விடுவித்து (அப்.26:18) புதுவாழ்வு அடையச் செய்ய முடியும்.
- தேவன் தமது மக்களை மீட்டு என்றென்றும் தம்முடன் வைத்துக் கொள்ள விரும்புகிறார். அதற்கு தடையாய் நிற்கின்ற பாவ சூழ்நிலைகள், எகிப்தின் நிந்தைகளிலிருந்து விடுவிக்கப்பட நமது மக்களையும் **முன்னேறிச் செல்** என்று பிரசங்கிப்போம். அப்போது சமுத்திரத்தை தாண்டி, உலர்ந்த தரையில் நடக்கும் அற்புதத்தை அவர்கள் வாழ்க்கையிலும் காண உதவிடமுடியும்.
- வெறும் அறுவடையாளர்களை எழுப்பும் என்ற ஜெபத்தோடு நிறுத்திவிடாமல் (மத்.9:36-38) மோசே போன்ற துணிந்து, பார்வோனை எதிர்கொள்ளும் மோசேக்களை எழுப்பும் என்று ஜெபிப்போம், அறைகூவல் விடுப்போம்.

தேசம் கர்த்தரை அறியும்போதுதான் (ஆபகூக் 2:14) நம் தேசமும் ஆசீர்வதிக்கப்படும், (எரே.29:7).

**நாமும் இப்புதுவருடத்தில் ஆசீர்வதிக்கப்படுவோம்.**



# குர்-ஆன் பகுதி- 3


Rev. ஜேக்கப் இஸ்ரேல்

இயக்குநர், இஸ்லாமியர் ஊழியங்கள்


## ஈஸா மஸிஹ் (இயேசு கிறிஸ்து) சிலுவையில் அறையப்பட்டாரா?

பெரும்பாலான இஸ்லாமியர்கள் நம்மிடத்தில் கேட்கும் கேள்விகளில் இதுவும் ஒன்று.

ஈஸா நபியை முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் உயர்ந்த இடத்தில் வைத்திருக்கின்றனர். அவர்கள் ஈஸாவை மிகப்பெரிய தீர்க்கதரிசியாக நினைக்கின்றனர். அவருடைய அற்புத பிறப்பையும், அவருடைய அற்புத செயல்களையும் ஏற்றுக்கொள்கின்றனர். குர்-ஆனும், இஞ்ஜீலும் (நான்கு சுவிசேஷங்கள்) அவர் பாவமில்லாத பரிசுத்தர் (குலாமன் ஸகிய்யான்) என்று கூறுகின்றனர். அவர் இவ்வுலகில் பிறந்த நாள் முதல் மரித்த நாள் வரையிலும் எந்தப் பாவமும் செய்யவில்லை. ஈஸா இவ்வுலகில் வாழ்ந்தபோது **"என்னில் பாவம் உண்டென்று யார் என்னை குற்றப்படுத்தக்கூடும்"** என்றார். ஈஸாவைத் தவிர வேறு எவருமே இப்படிக் கேட்க முடியாது. சிலுவை மரணத்தை குறித்து இருதரப்பினருக்கும் கருத்து வேறுபாடு உண்டு. ஈஸாவினுடைய இவ்வுலக வாழ்க்கையின் கடைசிப் பகுதி எப்படி இருந்தது என்பதைக் கொண்டுதான் இக்காரியம் தீர்மானிக்கப்பட வேண்டும். ஈஸா சிலுவையில் அறையப்பட்டாரா? அது எப்படி நடந்தது? அது எப்படி நடக்கும்? என்று சிலர் கேட்கிறார்கள். சில மதத்தவர்கள் அவருடைய வாழ்க்கையே முடிந்து விட்டது என்கிறார்கள். சிலர் அவர் மரணத்திற்குள்ளாகப் போகவில்லை என்கிறார்கள். வேறு சிலர் அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்று சொல்கிறார்கள். இக்கருத்துக்களில் எது உண்மை என்று கண்டுபிடிக்க வேண்டுமல்லவா?

ஈஸாவின் மரணத்தைக் குறித்து குர்-ஆன் வசனங்களின்படி இக்கேள்வி கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் அன்று முதல் இன்று வரை மிகப்பெரிய வாக்குவாதமாகவே இருந்து வருகிறது.

அவரது மரணத்தைக் குறித்து முதலாவதாக (குர்-ஆன்) சூரா, மர்யம் 19:33-ம் ஆயத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**நான் பிறந்த நாளிலும், நான் மரிக்கும் நாளிலும் மறுமையில் நான் உயிர் பெற்றெழும் நாளிலும் என் மீது சாந்தியும் சமாதானமும் நிலை பெற்றிருக்கும்.**

இந்த ஆயத்தில் அவருடைய மரணத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கையாகவே மரியமுடைய மகன் ஈஸா முழு மனித சுபாவமுடையவராய் இருந்தார் என்று இந்த வசனம் எடுத்துக்காட்டுகிறது. **"நான் உயிர் பெற்றெழும் நாளிலும்"** என்பது **இறைவார்த்தையின்படி அவருடைய உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது**. ஆனால் **சூரா 4:157-ம்** ஆயத்து இக்கருத்து சற்றே முரண்பட்டதாகப் தோன்றுவதால் இஸ்லாமியத்தின் ஆரம்ப காலத்திலேயே இது ஈஸாவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு தான் சம்பவிக்கும் என்று வியாக்கியானம் செய்து வருகிறார்கள். ஈஸா மஸிஹ் "இரண்டாம் வருகையில் வந்த பின் 40 வருடம் ஜீவிப்பார். அதன்பின் இயற்கையாய் மரணம் அடைவார். முஸ்லீம்கள் அவரை அடக்கம் செய்வார்கள்" என்று சொல்லப்படுகிறது.

"ஈஸாவே நிச்சயமாகவே நான் உம்மை மரிக்கச் செய்வேன்" **சூரா (3:55)** வியாக்கியானம் செய்கிறவர்கள் இந்த ஆயத்தின் பொருளை வேறுவிதமாகப் புரிந்து கொள்கிறார்கள். இந்த ஆயத்தில் சொல்லப்படும் "**மரணம்" என்றால் என்ன?** சிலர் அது ஒரு தூக்கமாக இருந்தது என்கின்றனர். தூங்கும்போது இறைவன் ஈஸாவை தன்னிடம் உயர்த்திக் கொண்டார் என்றும் வேறு சிலர் மரணம் என்பது வாழ்க்கையை பூர்த்தி செய்வதேயாகும் என்றும் சொல்கிறார்கள். மற்றொரு பிரிவினர் "நான் உம்மை என்னுடைய உடைமையாளியாக்கிக் கொள்ளுவேன்" என்று வியாக்கியானம் செய்கிறார்கள். ஈஸா மஸீஹ் தஜ்ஜாலைக் (அந்தி கிறிஸ்து) கொல்லும் வரை அவர் மரிக்கமாட்டார் என்பது முஸ்லீம்களின் ஒரு பிரிவினரின் நம்பிக்கை. நான்காவது பிரிவினர் சொல்லும்போது இது இயற்கையான மரணம், அல்லது "வியாதிப்படுக்கையில் இருப்பதுபோல ஒரு மரணமடைந்தார்" என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த வார்த்தையின் உண்மையான அர்த்தம் என்ன?

"**நான் உம்மை மரிக்கச் செய்வேன்**" என்பதாகும். மேலே குறிப்பிட்ட அந்த ஆயத்தின் அர்த்தம் என்னவென்றால் "**முத்தவஃபீக்க**" அதாவது "**மரிக்கச் செய்வேன்**" இந்தப் பதம் குர்-ஆனில் மனிதனின் மரணத்தைக் குறிப்பிடுவதை அநேக இடங்களில் காணலாம். மனிதர்கள் நல்ல முறையில் வாழும்போது தூதர்கள் அவர்களை நல்ல மரணத்துக்கு நேராக நடத்துகிறார்கள் (சூரா 16:32; 2:240; 6:61 7:37; 47:27;16:28).

இக்காரியங்களைக் குறித்து இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் அனைவருக்கும் வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. அதை ஆராய்ந்து பார்த்தால் மேற்கூறியப்படி வித்தியாசமாகவும் ஒன்றுக்கொன்று எதிரிடையாகவும் இருக்கின்றன. இச்சூழ்நிலையில் ஈஸா மஸிஹ் மரணத்தைக் குறித்து இன்ஜீல் (நான்கு சுவிசேஷங்கள்) என்ன கூறுகிறதென்று பார்ப்போம்.

இன்ஜீலில் ஈஸா மஸிஹ் கன்னி பிறப்பு, அற்புதங்கள், சிலுவை மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் முதலியவற்றைக் குறித்து விளக்கமாகக் கூறுகிறது. அவரது சிலுவை மரணமும், உயிர்த்தெழுதலும், பாவிகளின் மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, சரீரம் உயிர்த்தெழுதல் முதலானவற்றோடு சம்மந்தப்பட்டவை களாயிருக்கின்றன.

கிறிஸ்தவ சரீரத்தின் ஆரம்பம் முதல் அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருவதை நாம் இன்ஜீலில் காணலாம். வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கும் அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார் (1கொரி. 15:3-6).

அரேபிய தீவில் எழுந்த சில கள்ளப்போதகர்கள், கள்ளகுருமார்கள் மூலமாக முஸ்லீம்களுக்கு ஈஸா மஸிஹ் மரணத்தைக் குறித்து தவறான போதனைகள் கிடைத்தது. இதில் சந்தேகமே இல்லை. இன்னும் சிலர் சிலுவை மரணத்தைக் குறித்து மாறுபட்ட கருத்துகளைச் சொல்லுகிறார்கள். அதென்னவெனில் "ஈஸா தன் சுயரூபத்தை விட்டு மற்றொரு ரூபம் எடுக்க வல்லமை உள்ளவராய் இருந்தார்" என்பதேயாகும். இந்த விதமான மாறுபட்ட விவாதங்களுக்கு விடை காண நாம் சரித்திரத்தைக் காண வேண்டியுள்ளது.

அதில் நமக்கு ஏராளமான சாட்சிகளை பார்க்க முடியும். இச்சம்பவத்தில் ரோமர்களும், யூதர்களும், கிறிஸ்துவை உடையவர்களும், பெரிய ஜனக்கூட்டமும் உட்படுவார்கள். வேதாகமத்தில் எழுதியுள்ளதுபோல் பொந்தியு பிலாத்துவினுடைய

ஆணையின்படி, ஈஸாவைச் சிலுவையில் அறைந்ததும், ஈஸா சிலுவையில் மரித்த உடனே, அவர் சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கி, கல்லறையில் அடக்கம் செய்து கல்லறையின் வாசலைப் பத்திரமாய் அடைத்து பிலாத்துவினால் முத்திரையிடப்பட்டதை பார்த்தபோது ஈஸாவின் மேல் குற்றம் சுமத்திய பரிசேயரும் சதுசேயரும் மதத்தலைவர்களும் ஒரே மாதிரியாக தங்கள் வெற்றியை எண்ணி மதி மயங்கி இறுமாப்பு கொண்டனர். இதோடு ஈஸா மஸிஹ் மட்டுமல்ல அவருடைய உபதேசமும், அவருடைய அற்புத வல்லமையும் முடிந்தது என்று நினைத்து ஆனந்தமடைந்தார்கள். ஆனால் இறைவனின் விருப்பமும், சித்தமும் என்னவென்றால், அவருடைய மரணத்தின் மூலம் மனுக்குலம் முழுவதையும் தன் பக்கமாய் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே! **“யோவான் 12:32-ல்; நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லோரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்”** என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார்.

கிறிஸ்து உலகத்திலிருக்கும்போது அவருக்கு வரப்போகும் மரணத்தைக் குறித்து தவ்ஹாத் (ஐந்து ஆகமங்கள்) சபூர்; (சங்கீதங்கள்) மற்ற ஆகமங்களிலும் அநேக தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டுள்ளன. மட்டுமல்லாமல், ஆதாம் முதல் எல்லா தீர்க்கதரிசிகளும் இது நடக்கும் என்று அங்கீகரித்து, அத்தீர்க்கதரிசனங்களை நம்பினார்கள். அவர்களுடைய விசுவாசம் அவர்களுக்கு நீதியாய் எண்ணப்பட்டது. கிறிஸ்து தன்னுடைய மரணத்தைக் குறித்து முன்கூட்டியே சொல்லியிருந்தார். மத்தேயு 16:21-ல் அது முதல் இயேசு தாம் எருசலேமுக்கு போய் மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள்பட்டு, கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதை தம்முடைய சீஷர்களுக்கு சொல்லத் தொடங்கினார். அதன் பின்பு பன்னிரண்டு சீஷர்களையும் அவரோடு கூட்டிக்கொண்டு நாம் எருசலேமுக்குப் போகிறோம். அங்கு மனுஷகுமாரனைக் குறித்து எழுதிய தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறும் அவர்கள் அவரை ஜனங்களுக்கு ஒப்புக் கொடுக்கவும், அவர்கள் அவரை பரிகசித்தும் அவமானம் செய்தும், அவர் முகத்தில் துப்பி அடித்துக் கொல்லவும் மூன்றாம் நாள் அவர் உயிர்த்தெழவும் செய்வார் என்று கூறினார்.

கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்கு மிகப் பெரிய நோக்கம் உண்டு. அதென்னவெனில் விழுந்து போன மனுக்குலத்தை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்டெடுத்து, இரட்சித்து பரிசுத்தப்படுத்தி அவர்களை இறைவனுக்குச் சமீபமாய் கொண்டு வந்து அவர்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதே! சிலுவையில் செய்துமுடித்த பெரும்பணியின் மூலமாக அவர் இந்த ஆசீர்வாதங்களையெல்லாம் நமக்களித்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய மரணமும் உயிர்த்தெழுதலும் காரணம் ஏதுமின்றி நடந்த சம்பவங்களல்ல. அவற்றின் மூலம் உண்டாகும் மீட்பைத் தள்ளி விடுகிறவர்கள் தங்கள் ஆத்துமாவையே வஞ்சித்துக் கொள்கிறார்கள். இச்சம்பவத்தை குறித்து விழிப்படையச் செய்வதற்குப் போதுமான சரித்திர ஆதாரங்கள் நடைமுறையில் உண்டு. அதிக முக்கியமான சரித்திர சான்றுகளுடன் கூடிய சாட்சிகளும் உண்டு. கிறிஸ்துவையும் அவருடைய மரணத்தையும் நேரில் பார்த்தவர்களும் சாட்சி கூறியுள்ளார்கள்.

சரித்திரங்களின்படி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து
பிறந்தது உண்மை! மரித்தது உண்மை! உயிர்த்தது உண்மை!
எல்லா புகழும் அவர் ஒருவருக்கே!!!

*Happy New Year*

# வேதாகமத்தில் காணப்படும் எழுப்புதல்கள்

வேதாகமத்தில் காணப்பட்ட சில எழுப்புதல்களை இங்கு சுருக்கமாக காண்போம்.

1. **சாமுவேல்**-இவர் தேசத்திற்கு அறிவுரை கூறி, அந்நிய தேவர்களை அகற்றி. மெய்யான ஒரே உண்மை தேவனை வழிபட, ஜனங்களை ஆயத்தப்படுத்தினபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 சாமு.7:36).
2. **தாவீது**-முதன் முதலாக உடன்படிக்கைப் பெட்டியானது, எருசலேமுக்குள் கொண்டு வரப்பட்டபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 நாளா.15:25-28; 16:1-43; 29:10-25).
3. **சாலமோன்** - தேவாலயத்தை கட்டிமுடித்து அதை பிரதிஷ்டை செய்தபோது (2 நாளா.7:1-3).
4. **ஆசா**-விக்கிரகங்களையும், சோதோமியரையும் தேசத்தைவிட்டு அகற்றி, ஜனங்களை கர்த்தரைத் தேட வைத்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 இராஜா. 15:11-15).
5. **யோசபாத்**-தேவாலயத்தைச் சுத்திகரித்து மற்றும் லேவிய ஆசாரியத்துவத்தை பரிசுத்தம் செய்ததினால், எழுப்புதலுக்கு காரணமானார் (2நாளா. 19).
6. **எலியா**-கர்மேல் மலைமீது பாகாலின் தீர்க்கதரிசிகளை முறியடித்து வானத்திலிருந்து அக்கினியை ஜெபத்தால் வரவைத்தபோது ஜனங்கள் கர்த்தரே தெய்வம் என்று ஆர்ப்பரித்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (1 இராஜா. 18:21-40).
7. **யெகூ**-பாகால் வணக்கம் மற்றும் அவர்களது விக்கிரக தோப்பு, ஆலயங்கள் போன்றவற்றை முற்றிலும் அழித்துத் தீர்த்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (2இராஜா.10:17-20)
8. **யோய்தா**-பிரதான ஆசாரியராகிய இவர் விக்கிரகங்களை விட்டு திரும்பும்படி ஜனங்களை உடன்படிக்கை செய்யும்படி செய்து தேவனை ஆராதிக்க செய்தது மூலம் ஏற்பட்ட எழுப்புதல் (2 இராஜா. 11:17-20).
9. **எசேக்கியா**-தேவாலயத்தை சுத்திகரித்து பஸ்கா பண்டிகையை மீண்டும் ஏற்படுத்தியபோது ஏற்பட்ட எழுப்புதல் (2 நாளா. 29:31).
10. **யோசியா**-தேவாலயத்தை சுத்தகரித்தபோது, நியாயப்பிரமாணப் புத்தகம் கண்டுபிடிக்கப்பட்டு, அதை இராஜாவுக்கும் மற்றும் பொது ஜனங்கள் முன்னிலையில் வாசித்தபோது, அதன் விளைவாக ஏற்பட்ட எழுப்புதல் (2 இராஜா. 22-23).
11. **எஸ்றா** - இஸ்ரவேலர் புறஜாதிய பெண்களை விவாகஞ்செய்தபடியால், அவர்களை விட்டு வேறுபிரிய எஸ்றா பிரசங்கித்ததன் விளைவாக ஏற்பட்ட எழுப்புதல் (எஸ்றா 9-10).
12. **நெகேமியா** - எருசலேமின் மதில்களைக் கட்டிமுடித்த பின்னர், எஸ்றா ஜனங்கள் அனைவரின் முன்னிலையில் தேவ வசனத்தை வாசித்து போதனை செய்தபோது, பெரிய எழுப்புதல் உண்டானது (நெகேமியா 13).
13. **யோனா**-இவர் எதிர்மறையான எண்ணமுடையவராயிருந்தும், இவரது பிரசங்கமானது, பெரியதான மனமாற்றத்தை ஏற்படுத்தி நினிவே பட்டணத்தில் வாழ்ந்து வந்த அசீரியர்கள் நடுவே பெரிய எழுப்புதலை உண்டாக்கிற்று (யோனா 3).

- இதன் தொடர்ச்சி 24-ம் பக்கம் பார்க்கவும்.

# நீதிமானோ...



Rev. **Steve Asir**
(President - Christ's Ambassadors)

அன்பான கிறிஸ்துவின் ஸ்தானிகர் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

தேவப் பிள்ளைகளாகிய நாம் எல்லாக் காலத்திலும் எல்லா சூழ்நிலையிலும் நீதிமான்களாக வாழவே கர்த்தர் விரும்புகிறார். கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார். விசேஷமாய் வாலிபப் பிராயத்தில் நீதிமானாய் வாழப் பிரயாசப்படும் போது கர்த்தர் கிருபையைத் தரப் போதுமானவராய் இருக்கிறார். "தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது" என்று புலம்பல் 3:27-ல் வாசிக்கிறோம்.

## நீதிமானாய் வாழ்கிறதினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

### 1. நீதிமானோ நித்திய அஸ்திபாரமுள்ளவன்

**நீதிமொழிகள் 10:25 சுழல்காற்று கடந்துபோவதுபோல் துன்மார்க்கன் கடந்துபோவான்; நீதிமானோ நித்திய அஸ்திபாரமுள்ளவன்.**

நீதிமானுடைய அஸ்திபாரத்தைக் கர்த்தர் உறுதியானதாய் மாற்றுகிறார். இவ்வுலகத்தில் மனிதர்கள் தங்கள் வாழ்நாளில் சாதிக்கும் சாதனைகளே தங்களுடைய உறுதியான அஸ்திபாரம் அசைக்க இயலாது என்று நினைக்கிறார்கள். ஆனால் வேறொரு சாதனையாளர் இவர்களைக் காட்டிலும் மேலான சாதனை செய்யும் போது இவர்கள் சாதனை மறக்கப்படுகிறது. நீதிமானுடைய நீதியுள்ள வாழக்கை ஒரு நாளும் மறக்கப்படுவதில்லை. ஆபேல் நீதியாய் காணிக்கை செலுத்தினான். அவன் மரித்த பிறகும் அவன் இன்னும் பேசப்படுகிறான். இதுவே உறுதியான அஸ்திபாரம் வாலிபர்களாகிய நாம் பரிசுத்த வாழ்க்கையை முக்கியப்படுத்தி வாழ்வோமேயானால் அதுவே அசையாத நித்திய அஸ்திபாரமாய் இருக்கும்.

### 2. நீதிமானோ அறிவினாலே தப்புவான்

**நீதிமொழிகள் 11:9 மாயக்காரன் தனக்கு அடுத்தவனை வாயினால் கெடுக்கிறான்; நீதிமானோ அறிவினால் தப்புகிறான்.**

கர்த்தர் என்னைப் பார்க்கிறார், நான் எல்லாவற்றையும் அவரிடம் கேட்டு செய்ய வேண்டும் என்பது மேலான அறிவு. நீதிமான் தன் வாழ்வில் தன் காரியங்களைக் கர்த்தரிடம் சொல்லி ஜெபிப்பதைப் பார்க்கிலும் அவரிடம்

அக்காரியத்தைக் குறித்து அனுமதி பெறுவதே ஞானமான செயலாய்ப் பார்க்கிறார். ஆபிரகாம் என்னும் நீதிமான் தேவனுக்காகக் காத்திருந்து அவரிடம் எல்லாவற்றையும் விசாரித்து அனுமதி பெற்றுக் காரியங்களை நடத்தினபோது அனைத்தும் ஞானமாய் இருந்தது. லோத்தோ தன் இஷ்டப்படி காரியங்களைச் செய்து கர்த்தர் சொல்லுக்கும் கீழ்ப்படியாமல் சுய அறிவிலே தீர்மானம் எடுத்துத் தன் காரியங்கள் அனைத்திலும் சிக்கிக் கொண்டான். நாம் நல்ல நீதிமானாய் ஆபிரகாமைப் போல அறிவுடையவர்களாய் இருந்து காரியங்களிலே தப்பக் கர்த்தர் கிருபை தருவாராக.

## 3. நீதிமானோ பாடி மகிழுகிறான்

**நீதிமொழிகள் 29:6 துஷ்டனுடைய துரோகத்திலே கண்ணியிருக்கிறது; நீதிமானோ பாடி மகிழுகிறான்.**

நீதிமான்களின் கூடாரத்தில் கெம்பீர சத்தத்தை உண்டுபண்ணுகிற தேவன் நீதிமான்களை எப்போதும் களிகூரப் பண்ணுகிறார். எல்லாக் காரியத்தைக் குறித்தும் நீதிமான்களுக்கு ஒரு தெளிவுண்டு. நீதிமான்கள் தங்கள் காரியங்களைப் பார்க்கும் போது அதிலுள்ள தேவத்திட்டத்தையும் செயலையும் பார்த்து கலக்கமடையாமல் தேவனுக்கு மகிமை செலுத்துகிறார்கள். பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு உட்காவலறையில் சிறையில் வைக்கப்பட்டாலும் அவர்களுக்குள் இருந்த தெளிவான பார்வை நடந்தவைகளுக்காக வருத்தமடையச் செய்யாமல் நடக்கப் போகிறவைகளை விசுவாசித்து மகிழ்ந்து பாடக் கிருபை செய்தது. இப்படியே நாம் வாலிபர்களாய் இருந்தாலும் நமது பார்வை தெளிவானதாய் இருக்கும்போது நாமும் நீதிமானைப் போலப் பாடி மகிழுகிறோம்.

---

22-ம் பக்க தொடர்ச்சி

**14. எஸ்தர்**-ஆமான் தன் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டு, யூதர் மனந்திரும்பி பூரீம் பண்டிகை கொண்டாடியபோது ஏற்பட்ட எழுப்புதல் (எஸ்தர் 9:17-22).

**15. யோவான் ஸ்நானன்**-மேசியாவின் வருகையைக் குறித்து பிரசங்கித்து, ஜனங்களை மனந்திருந்துமாறு பிரசங்கித்தபோது ஏற்பட்ட எழுப்புதல் (லூக்கா 3:2-18)

**16. இயேசு** - சமாரிய ஸ்திரீயுடன் பேசிமுடித்த பின்னர் சமாரியாவில் ஏற்பட்ட எழுப்புதல் (யோவான் 4:28-42).

**17. பேதுரு**-பெந்தெகொஸ்தே நாளில் இவரது பிரசங்கத்திற்கு பின் 3000 பேர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டபோது ஏற்பட்ட எழுப்புதல் (அப். 2).

**18. பிலிப்பு**-இவர் தேவனது இராஜ்யத்தைக் குறித்து சமாரியாவில் செய்த பிரசங்கத்தினால் அங்கு ஏற்பட்ட எழுப்புதல் (அப். 8:5-12).

**19. பேதுரு**-லித்தாவிலே ஐனேயா என்கிற மனிதனை குணமாக்கிய, லித்தாவிலும், சாரோனிலும் ஏற்பட்ட எழுப்புதல் (அப். 9:32-35).

**20. பவுல்**-மூன்றாவது மிஷனரி பயணத்தின்போது எபேசுவில் மாயவித்தைக் காரராயிருந்த அநேகர் தங்கள் புஸ்தகங்களை சுட்டெரித்தபோது நிகழ்ந்த எழுப்புதல் (அப். 19:11-20).



# இதை நினைத்து புருஷனாயிருங்கள்

(பகுதி 4)

## Remember this, and Show yourselves MEN


Rev.R.தாசையா

தேனி மண்டல தலைமைப் போதகர்


### வளரும் நல்ல புருஷராயிருங்கள்

### பூரண புருஷராகும்படி வளருங்கள்

நம்முடைய வளர்ச்சி பூரணமாக, முழுமையாக இருக்க வேண்டும். எது பூரணம்? எது முழுமையான வளர்ச்சி என்றால் கிறிஸ்துவின் வளர்ச்சியே நிறைவான வளர்ச்சி என்று பவுல் கூறுகிறார். **'மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும், ஒருமனப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் பூரண புருஷராகும் வரைக்கும்" [எபேசியர் 4:11]** என்ற பவுல் அப்போஸ்தலனின் வார்த்தை நம்மை கிறிஸ்துவைப்போல் பூரண புருஷனாக மாறும்படி, நிறைவான வளர்ச்சியை பெறும்படி அழைப்பு கொடுக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவ புருஷனும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியில் வளர வேண்டும். இது நடக்க தேவபக்திக்கேதுவாக முயற்சி செய்ய வேண்டும் (1தீமோ.4:7,8). நமது வளர்ச்சி இனி ஒரு கிறிஸ்தவரையோ, ஊழியரையோ சார்ந்து இருக்கக்கூடாது. இயேசுவைத்தான் சார்ந்து வாழ வேண்டும். **(OUR ROLE MODEL IS JESUS)** இயேசுவையே மாதிரியாக கொண்டு, அவரின் வளர்ச்சியே நமது வளர்ச்சியாக இருக்க வேண்டும்.

தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாய் இருக்க வேண்டும் என்று எபேசியர் 4:15ல் வாசிக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பூரண புருஷனாக நாம் செய்ய வேண்டியவைகளை விரிவாக காணலாம்.

### இயேசுவை அறியும் அறிவில் வளர்ச்சி

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (2பேதுரு 3:18). அதுதான் தேவனுக்கு மகிமை. இயேசுவைக் குறித்து வேதத்தில் சொல்லப்பட்டுள்ள அவரது தெய்வீகம், அவரது பூலோக வாழ்வு, அவரது சிலுவை மரணம், உயிர்த்தெழுதல், அவரது தெய்வீக அன்பு, அவரது இரகசிய மற்றும் இரண்டாம் வருகை போன்றவற்றை குறித்த தெளிவான அறிவை பெற்றிருக்க வேண்டும். அவருடைய கற்பனைகளை கைக் கொள்வது, அவர் நடந்தபடியே நாம் நடப்பது இவைகள் தான் நாம் இயேசுவை அறியும் அறிவில் வளர்கிறோம் என்பதற்கான ஆதாரம் (1 யோவான் 2:36)

### திருவசனத்தின் மேல் வாஞ்சை

திருச்சபையில் உள்ள புருஷர்கள் **நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் [1 பேதுரு 2:3].** திருவசனத்தில் வளர வேண்டும். அப்போதுதான் நல்ல

குணசாலிகளாக மாற முடியும். **அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான். அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் [அப்.18:24,26]. அப்பொல்லோ வேதாகமங்களில் வல்லவன், கர்த்தருக்கடுத்த காரியத்தில் திட்டமாய் போதகம்பண்ணும் திறமைஉடையவன். ஜெபஆலயங்களில் தைரியமாய் பேசுகிறவன். அவனுக்கே வசனத்தை சொல்லி அவனை திருப்புகிற அளவுக்கு ஆக்கில்லா இருந்தான்.** இன்று இப்படிப்பட்ட புருஷர்கள் தேவஊழியத்துக்கு தேவை, வீட்டிற்கு தேவை, நாட்டிற்கு தேவை. உங்களின் வேத அறிவு எப்படிப்பட்டது?

**கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான் [எஸ்றா 7:10].** எனவே தேவஜனங்களை சீர்ப்படுத்தும் அளவுக்கு ஒரு சீர்திருத்தவாதியாக காணப்பட்டான். தீமோத்தேயு வேதத்தில் வளர்ச்சியடைந்தவனாய் இருந்தபடியால் பிற்காலத்தில் பவுலுக்கு நல்ல உதவியாளனாக இருந்தான் (2தீமோ. 3:14,15).

**தங்கள் வாழ்க்கையை தேவ வார்த்தையால் அமைய பெற்றவர்கள் புயல், வெள்ளம், காற்று, பெருவெள்ளம் போன்ற எந்த இன்னல்களுக்குள் சென்றாலும் அவர்களின் வளர்ச்சியை தடை செய்ய முடியாது. இவர்களே சபையின் தலைசிறந்த புருஷர்கள்.**

## வேரூன்றி வளர்தல்

வேதவசனமாகிய நீர்க்கால்களின் நடுவில், வேத வார்த்தைகளால் சாரமேற்றப்பட்டதாக நம் வாழ்க்கை இருந்தால் எந்த புயல் காற்றினாலும் அசைக்கப்படாத ஆழமான வேர் கொண்ட மரமாக நம் வாழ்க்கை இருக்கும் என சங்கீதம் 1:2,3 வசனங்களில் வாசிக்கிறோம். இரவும் பகலும் வேதத்தில் தியானம் கொண்டு வளர்ந்த தாவீது நதியோரத்தில் வளரும் மரமாக இருந்தான். யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள், கீழே வேர் பற்றி மேலேகனி கொடுப்பார்கள் (ஏசாயா 27:6) எபேசியர் 3:17-ல் **"வேரூன்றுதல்"** என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. அதாவது மரமானது போஷாக்கையும், நிலையான தன்மையையும் பெற வேண்டுமானால், அதனுடைய வேர், நிலத்தில் ஆழமாக ஊன்றப்பட்டிருக்க வேண்டும். சபையின் புருஷரே உங்கள் வளர்ச்சி இப்படி இருக்கின்றதா? கிறிஸ்துவுக்குள், வசனத்துக்குள் ஆழமாய் கீழ்நோக்கிய வேராக, மேல் நோக்கிய மரமாக வளர வேண்டும். அன்பிலே நாம் வேரூன்ற வேண்டும்.

## வருத்தமின்றி தப்பாமல் கனி கொடுக்க வேரூன்றி வளர வேண்டும்

எரேமியா 17:58-ல் மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் அவாந்தர வெளியின் கறளாய்ப் போன செடியைப் போலிருந்து, நன்மை வருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர் நிலத்திலும்

தங்குவான். கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப் பட்டதும், கால்வாய் ஓரமாக தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றி தப்பாமல் கனி கொடுக்கிறதுமானமரத்தைப் போலிருப்பான். வேர் ஆழமாக கீழ்நோக்கி செல்லவில்லையென்றால் நீங்கள் மேல் நோக்கி வளர முடியாது (மத்தேயு 7:2429). **நாம் நம் வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் தப்பாமல் கனி கொடுக்கும் நம்பிக்கையுள்ளவர்களாய் மாற கிறிஸ்துவுக்குள் நாம் வளர வேண்டும்.**

### போராட்டங்கள் நடுவே நிலைத்து நிற்க வேஃருன்றி வளர வேண்டும்

தேவ வார்த்தையினால் அஸ்திபாரமாக்கபட்ட வாழ்க்கை, புயல், வெள்ளம், காற்று போன்ற எந்த இன்னல்களுக்குள் சென்றாலும், அதன் வளர்ச்சியை தடை செய்ய முடியாது (மத்தேயு7:2426). இவ்வகையான வாழ்க்கையை கொண்டிருப்பவர்களே திருச்சபையில் தலைசிறந்த புருஷர்கள். **நாம் நம் வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் உறுதியாய் இருக்கும் நபர்களாய் மாற கிறிஸ்துவுக்குள் நாம் வளர வேண்டும்.**

### பிறர் மெச்சிக்கொள்ளும் அளவு வளர்தல்

பவுல் வளர்ச்சியைப் பற்றி தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, (1 தீமோ.4:15) நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி... என்கிறார். அதன் அர்த்தம் உன்னோடு இருக்கும் சக சகோதரர்கள், நீ வளருகிறாய், உன்னில் ஓர் முதிர்ச்சி இருக்கிறது என்று உன் வளர்ச்சியை பின்பற்றுகிற விதத்தில், மெச்சிக்கொள்ளுகிற விதத்தில் வளரு என்கிறார். பேசும் வார்த்தையில்; பக்தியான வார்த்தை, புருஷனுக்குரிய நடை; வாழ்ந்து காட்டுவது. அன்பில் வளர வேண்டும், ஆவியில் வளர வேண்டும், விசுவாசத்தில் வளர வேண்டும், வாசிக்கிறதில் வளர வேண்டும், புத்திசொல்லுகிறதில் வளர வேண்டும், உபதேசிப்பதில் வளர வேண்டும், (1 தீமோ.4:12,13). ஜெபிப்பதில் வளர வேண்டும், ஊழியம் செய்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதில் வளர வேண்டும், கொடுப்பதில் வளர வேண்டும். இதுதான் சபையில் உள்ள ஆண்கள், புருஷர்கள் வளரும் நிலை.

**என்ன சாதித்திருக்கிறோம் என்பதைவிட, எவ்வளவு இயேசுவைப் போல் மாறியிருக்கிறோம் என்பதே ஆவிக்குரிய வாழ்வின் அளவுமானியாகும். நமது வளர்ச்சி கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் வளரவேண்டும் [எபே.4:15].** எனவே,

**கிறிஸ்துவுக்குள் வளருங்கள், கிறிஸ்துவால் வளருங்கள்,**
**கிறிஸ்துவுக்காக வளருங்கள், கிறிஸ்துவைப்போல் வளருங்கள்**

---

2026 **ஜனவரி 14,15,16**
(புதன், வியாழன், வெள்ளி)
**மத்திய வாலிபர் முகாம்**
கேம்ப் சைட், மதுரை

2026 **ஜனவரி 26**
(திங்கள்கிழமை)
**மண்டல உபவாச நாள்**
அந்தந்த மண்டலங்களில்

# பரிசுத்த ஆவியானவர்

## 1. பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள்

வேதாகம எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவருக்குக் குறிப்பிட்ட சிறப்பு அடையாளங்களை பயன்படுத்தினர். ஏனென்றால் அவைகள் பல வார்த்தைகள் சொல்வதைக் காட்டிலும் அவரைப்பற்றி அதிக விளக்கங்களைத் தருகிறது.

**1. அக்கினி** (அப்.2:3).

விசுவாசிகளின் வாழ்வில் சுத்திகரிக்கும் சக்தியையும் (வல்லமையையும் சொல்கிறது. (அப்.2:3; ஏசாயா 6:1-7). அக்கினி வெளிச்சம் காட்டுகிறது (சங்கீதம் 78:14).

**2. காற்று** (யோவான் 3:8)

காற்று அவரின் வல்லமையான புதுவாழ்வூட்டும் சக்தியைச் சொல்கிறது. காற்று அதன் விளைவுகளில் ஆற்றல்மிக்கதாயும், அதன் பலன்கள் பார்க்கக்கூடியதாகவும் இருக்கிறது.

**3. தண்ணீர்** (யோவான் 7:37-39)

தண்ணீர் ஆவிக்குரிய வாழ்க்கையில் விசுவாசிகள் நிரம்பி வழிய ஊற்றப்படுகிற அவரது வல்லமையைப் பற்றிப் பேசுகிறது (எபிரெயர் 10:22; சங்கீதம் 46:4).

**4. முத்திரை** (எபேசியர் 1:13).

விசுவாசிகளின் மேல் அவருக்குள்ள உரிமையைச் சொல்கிறது.

**5. எண்ணெய்** (அப்.10:38).

எண்ணெய் ஊழியத்திற்கென்று அபிஷேகம் பண்ணப்பட்ட அவரின் வல்லமையைச் சொல்கிறது. எண்ணெய் சுகமாக்குகிறது (வெளி.3:18). மட்டுமல்லாமல் ஆறுதல்படுத்துகிறது.

**6. புறா** (மாற்கு 1:10).

புறா, அவரின் கனிவான மென்மையான அமைதியான பண்பைச் சொல்கிறது.

## 1. பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்

விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பின்வருமாறு கிரியை செய்கிறார்.

1. பாவத்தைக்குறித்து நம்மைக் கண்டித்து உணர்த்துகிறார் (யோவான் 16:9).
2. தேவ அன்பை நம்மில் ஊற்றுகிறார் (ரோமர் 5:5).
3. நமக்கு ஜெபிப்பதற்கு உதவி செய்கிறார் (ரோமர் 8:26; எபே.6:18; அப். 4:23,24).
4. விசுவாசிகளைப் புதிதாக்குகிறார் (யோ.3:5; தீத்து 3:5).
5. விசுவாசிகளுக்குள் வாசம் செய்கிறார் (ரோமர் 8:11; 1கொரி.6:19).
6. விசுவாசிகளை முத்திரை போடுகிறார் (எபே.1:13,14).
7. நம்மைஒன்றுபடுத்துகிறார்(1கொரி.12:13).
8. விசுவாசிகளை நிரப்புகிறார் (எபே.5:18).
9. சாட்சிகளாய் மாறுவதற்கு வல்லமையும், தைரியமும் தருகிறார் (அப்.1:8;4:31; 6:9;10).
10. விசுவாசிகளை வழிநடத்துகிறார் (ரோமர் 8:14)
11. விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய வரங்களை பகிர்ந்தளிக்கிறார் (1கொரி.12:1-11).
12. நம்மை ஆராதனை செய்ய வழிநடத்துகிறார்.
13. அவருடைய கனிகளை நம்மிலே வளரச் செய்கிறார்.
14. நம்மை ஆறுதல்படுத்தி, ஊக்குவிக்கிறார்.
15. கிறிஸ்துவின் வருகைக்காக நம்மை ஆர்வப்பட வைக்கிறார் (ரோமர் 8:23; வெளி.22:20).

## 3. ஆவியானவருக்கு விரோதமான பாவங்கள்

1. பரிசுத்த ஆவியை தூஷித்தல் (மத்.12:31,32).
2. பரிசுத்த ஆவியை எதிர்த்து நிற்பது (அப்.7:51).
3. பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவது (எபே.4:30,32).
4. பரிசுத்த ஆவியை அவித்துப்போடுவது (1தெச.5:19).
5. பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்வது (அப்.5:3)

## 4. பரிசுத்த ஆவியின் கனிகள்

அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5:22,23)

## 6. பரிசுத்த ஆவியின் வரங்கள் (1கொரி.12:8-10)

1. ஞானத்தைப் போதிக்கும் வரம்.
2. அறிவை உணர்த்தும் வரம்.
3. விசுவாசம்.
4. குணமாக்கும் வரம்.
5. அற்புதங்களைச் செய்யும் வரம்.
6. தீர்க்க தரிசனம் உரைக்கும் வரம்.
7. ஆவிகளைப் பகுத்தறியும் வரம்.
8. பற்பல பாஷைகளைப் பேசும் வரம்.
9. பாஷைகளை வியாக்கியானம் செய்யும் வரம். வாசிக்கவும் : மாற்கு 16:17-18; ரோமர் 12:6-8; எபேசியர் 4:8-13; 1பேதுரு 4:10-11).



**சிறுவர் பகுதி**

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ

**பாஸ்டர். பெவிஸ்டன்**
பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan

ஹய் குட்டீஸ்! எப்படியிருக்கிறீங்க..? உங்க அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்! இப்புதிய ஆண்டு உங்களுக்கு மகிழ்ச்சியும் ஆரோக்கியமும், தெய்வீக நிறைந்ததாகவும் மாற உளமாற வாழ்த்துகிறேன். புத்தாண்டு ஸ்பெஷலாக இன்று உங்களுக்கு ஒரு அக்காவை அறிமுகம் செய்து வைக்க விரும்புகிறேன். அந்த மேரி ஜோன்ஸ் அக்கா வேற லெவல் சம்பவம் பண்ணிருக்காங்க குட்டீஸ்! அப்படியென்னனு கேட்கிறீங்களா? வாங்க வரலாற்றை சுவைபட கூறுகிறேன்.

மேரி ஜோன்ஸ் 16 டிசம்பர் 1784ல் வேல்ஸ் நாட்டில், இந்திரிஸ் மலையடி பகுதியில் உள்ள ஒரு சிற்றூரில் பிறந்தாள். அவளுடைய பெற்றோர் ஏழ்மையான நெசவுத் தொழிலாளர்கள். அவர்கள் மெத்தடிஸ்ட் சிற்றாலயத்தில் தேவனை ஆராதித்து வந்தார்கள். மேரியும் சிறுவயதிலிருந்தே தேவாலயம் செல்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவளாக இருந்தாள். அவள் வாழ்ந்த ஊரிலிருந்து தேவாலயம் செல்ல 2 மைல் தூரம் நடக்க வேண்டும். ஆனாலும் அந்த தூரம் அவளுக்கு ஒரு பொருட்டே இல்லை. ஆலயத்தில் போதிக்கப்படும் தேவவசனங்களை மிகுந்த கவனத்தோடு கேட்டாள்.

அந்த ஆலயத்தில் கருப்பு நிற தோலில் பைண்ட் செய்யப்பட்ட ஒரு பெரிய வேதாகமம் இருந்தது. பாஸ்டர் அதிலிருந்துதான் பிரசங்கிப்பார். ஆராதனை முடிந்த பின் மேரி அந்த வேதாகமத்தை திறந்து பார்ப்பாள். ஆனால் அவளுக்கு வாசிக்கத் தெரியாது. அது அவளுடைய இருதயத்தை மிகவும் வேதனைப்படுத்தியது.

வேதாகமத்தைத் தானே வாசிக்க வேண்டும் என்ற ஆசை அவளுக்குள் நாளுக்கு நாள் அதிகரித்தது. மேரி, 9 வயதாக இருக்கும்போது, ஒரு ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் அறிவிப்பு செய்யப்பட்டது. இந்த கிராமத்தில் ஒரு தொடக்கப்பள்ளி ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று.

அந்த அறிவிப்பைக் கேட்டதும் மேரியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இனி நான் வேதாகமத்தை வாசிக்கக் கற்றுக்கொள்ளலாம் என்ற ஒரே ஆசை அவளுடைய மனதில் இருந்தது.

அந்த பள்ளி ஒரு விவசாயப்பண்ணை வீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியர் இவான்ஸ் அவர்களும், அவருடைய மனைவியும் பிள்ளைகளுக்குப் பாடம் கற்றுக்கொடுத்தார்கள். மேரி வீட்டு வேலைகளை எல்லாம் சீக்கிரமாக செய்து முடித்து, சரியாக பள்ளிக்கு வந்துவிடுவாள். மிகுந்த ஆர்வத்தோடு படித்தாள். அவளுடைய உழைப்பையும் முயற்சியையும் பார்த்து அவளது பெற்றோரும் ஆசிரியர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

ஒருநாள் மேரி தனது தாயாரிடம், அம்மா, எனக்குச் சொந்தமாக ஒரு வேதாகமம் வேண்டும். அதிலிருப்பதை நானே வாசிக்க வேண்டும் என்று சொன்னாள். அவளுடைய தாயார், மேரி, வேல்ஸ் மொழியில் வேதாகமம் கிடைப்பதே அரிது. அதோடு அதை வாங்குவதற்கு நம்மிடம் பணமும் இல்லை என்று வருத்தப்பட்டார். அதற்கு மேரி, அம்மா, ஆண்டவர் எனக்கு வாசிக்கக் கற்றுக்கொள்ள

வாய்ப்பு தந்தாரே, அவர் எனக்கு ஒரு வேதாகமத்தையும் தருவார் என்று உறுதியான விசுவாசத்தோடு சொன்னாள். அம்மாவும் மகளும் சேர்ந்து தினமும் ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.

மேரி, வீட்டில் இருந்த சிறிய பணப்பெட்டியில், கோழி முட்டைகளை விற்றும், பிற வீடுகளில் வேலை செய்தும் சிறுக சிறுக பணம் சேமித்தாள். மற்ற பிள்ளைகள் விளையாடும் நேரங்களில், மேரி மட்டும் உழைத்து பணம் சேர்த்தாள். 6 ஆண்டுகள் கழித்து, ஒரு வேதாகமம் வாங்கும் அளவுக்கு பணம் சேர்ந்தது. அவள் போதகரிடம் சென்று வேதாகமம் கிடைக்குமா என்று கேட்டாள். அப்போது போதகர், இங்கே கிடைக்காது. 'பாலா' என்ற இடத்தில் போதகர் தாமஸ் சார்லஸிடம் இருக்கலாம். ஆனால் அது 25 மைல் தூரம் என்றார்.

மேரி அதைக் கேட்டதும் தயங்கவில்லை. நான் போய் வாங்கி வருகிறேன் என்றாள். அவளுடைய தாயார் கவலையோடு இருந்தாலும், தேவன் மேல் நம்பிக்கை வைத்து அவளை அனுப்பினாள்.

அடுத்த நாள் அதிகாலை, மேரி வேதாகமம் வாங்க பயணத்தைத் தொடங்கினாள். கரடுமுரடான மலைப்பாதை. செருப்பு தேய்ந்து போய்விடக் கூடாது என்பதற்காக வெறுங்காலோடு நடந்தாள். பாலா கிராமம் சென்றபோது அவளுடைய கால்கள் வீங்கி சிவந்திருந்தது.

போதகர் தாமஸ் சார்லஸின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினாள். தான் 6 ஆண்டுகள் சேமித்த பணத்தோடு, 25 மைல் நடந்து வந்ததையும், வேதாகமம் வேண்டும் என்ற ஆசையையும் பணிவோடு சொன்னாள். போதகர், "என்னிடம் இருக்கும் வேதாகமங்கள் எல்லாம் ஏற்கெனவே வேறொருவருக்கு கொடுக்க வாக்குறுதி கொடுக்கப்பட்டவை என்றார்". அதை கேட்டதும் மேரி அழுதுவிட்டாள்.

அந்த கண்ணீரைக் கண்ட போதகர், மனம் உருகி, இவ்வளவு தூரம் நடந்து, இவ்வளவு தியாகம் செய்து வந்த உன்னை நான் அனுப்ப முடியாது என்று சொல்லி, ஒரு புத்தம் புதிய வேல்ஸ் மொழி வேதாகமத்தை அவளுக்குக் கொடுத்தார்.

மேரி அந்த வேதாகமத்தை மார்போடு அணைத்துக் கொண்டாள். அது ஆனந்தக் கண்ணீர். மறுநாள் 25 மைல் நடந்து வீட்டிற்குத் திரும்பினாள்.

இந்த சம்பவம் போதகர் சார்லஸின் மூலம் பலருக்குத் தெரியவந்தது. இதன் விளைவாக 1804ம் ஆண்டு Bible Society உருவானது. இன்று உலகம் முழுவதும் நூற்றுக்கணக்கான நாடுகளில், ஆயிரக்கணக்கான மொழிகளில் வேதாகமம் கிடைக்கிறது. இதற்கெல்லாம் ஆரம்ப காரணம் ஒரு 16 வயது பெண், மேரி ஜோன்ஸ்!

அன்பான தம்பி தங்கைகளே, மேரி ஜோன்ஸைப் போல வேதாகமத்தை நேசிக்கும் இருதயம் நம்மிடமும் இருக்கிறதா? இந்த புதிய ஆண்டில், தினமும் வேதாகமம் வாசிப்போம். குறைந்தது ஒரு முறை முழு வேதாகமத்தை வாசித்து முடிப்போம் என்று தீர்மானம் எடுப்போமா?

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்... டாட்டா...



# முன்னோக்கிச் செல்லுங்கள்

## MOVING FORWARD


Rev.K. ராஜா

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்


கிறிஸ்துவில் அன்பான மாணவ மாணவிகள் மற்றும் இதழின் வாசகர்கள் அனைவருக்கும் இல்லாதவைகளை இருக்கிறவைகளை போல பெயர் சொல்லி அழைக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

...பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி... (பிலிப்பியர் 3:13).

ஒரு தீப்பெட்டியில் கிடக்கும் கடைசி தீக்குச்சியை பற்ற வைக்கும்போது இருக்கும் ஜாக்கிரதை முதல் தீக்குச்சியை பற்றவைக்கும்போதே இருந்தால், எப்படி நிறைய வாய்ப்புகள் கையில் இருக்குமோ,

அதைப்போலவே எந்த ஒரு விஷயத்திலும், கடைசியில் காண்பிக்கப்படும் தீவிரம் அல்லது கடைசியில் கொடுக்கப்படும் முக்கியத்துவம் ஆரம்பத்திலேயே காண்பிக்கப்படுமானால், நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். அவைகளை பயன்படுத்தி எந்த ஒரு விஷயத்திலும் வெற்றி பெறுவது மட்டுமல்ல, அந்த விஷயத்தில் அடுத்த நிலையை நோக்கி முன்னேறிச்செல்ல முடியும். தவறவிட்ட வாய்ப்புகளையும், தவறிப்போன வாய்ப்புகளையும் நினைத்து வருத்தப்படுவதில் எந்த பலனும் இல்லை. இனி இருக்கும் வாய்ப்புகளை எப்படி பயன்படுத்த போகிறோம் என்பதில் தான் முன்னேற்றம் இருக்கிறது.

எனவே இந்த புதிய ஆண்டில் ஆரம்பம் முதலே உங்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் மிகுந்த கவனத்தோடு பயன்படுத்திக்கொள்ள கவனமாக இருங்கள். உங்கள் ஆவிக்குரிய வாழ்விலும், படிப்பிலும் அடுத்த நிலை நோக்கி முன்னேறிச்செல்ல தீர்மானியுங்கள். அடுத்த நிலை நோக்கி முன்னேறிச்செல்ல தீர்மானிக்கிற உங்கள் சிந்தனைக்காக சில வார்த்தைகள்.

### I.ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறிச் செல்ல: TO MOVE FORWARD IN SPIRITUAL LIFE

#### 1. ஆராதனைக்கு முந்திச்செல்லுங்கள்: GO AHEAD TO THE SERVICE

ஆராதனைக்கு சரியான நேரத்திற்கு செல்லுங்கள். உங்கள் சபை ஆராதனையில் முழுமையாக பங்கு பெறுங்கள். ஆராதனையை அசட்டை பண்ணாதீர்கள். சபை கூடி வருதலை சிலர் விட்டுவிடுகிறது போல நீங்களும் விட்டுவிடாதீர்கள் என்று எபி.10:25 சொல்கிறது. ஆகவே உங்கள் ஆராதனையில் மனப்பூர்வமாய் பங்கு பெறுங்கள்.

#### 2. ஆராதிப்பதில் முன்னோக்கிச்செல்லுங்கள்: FORWARD IN WORSHIP

உங்கள் சபை ஆராதனையில் பாடல் ஆராதனை நடத்துகிறவர்களோடு இணைந்து பாடி தேவனை மகிமைப்படுத்துங்கள். கரங்களைத் தட்டி நன்றாய் சப்தமாய் பாடி தேவனை ஆராதனை செய்யுங்கள் (சங்.150:1-6). ஆராதனையில்

பரவசம் முக்கியமல்ல, தேவபிரசன்னமே முக்கியம். ஆகவே, ஆராதனையில் தேவப்பிரசன்னத்தை உணர்வதற்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

**3. ஜெபம் பண்ணுவதில் முன்னோக்கி செல்லுங்கள்: FORWARD IN PRAYER**

இதுவரை நீங்கள் ஜெபம் பண்ண தெரியாதவராக இருந்தால், ஒன்றும் தவறில்லை ஜெபம் பண்ண பழகிக்கொள்ளுங்கள். வெட்கப்படாதீர்கள். ஜெபத்தை கேட்கிறவரே என்று சங்.65:2 சொல்லுகிறது. அப்படியானால் நம்முடைய மனதில் உள்ளதை வார்த்தையாக நாம் சொல்ல வேண்டும் என்பது இதில் புரிகிறது. அதை ஆண்டவர் கேட்டு நமக்கு பதில் செய்கிறார் என்றும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே உங்கள் மனதில் உள்ளதை தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்.

**4. வேதம் வாசிப்பதில் முன்னோக்கிச் செல்லுங்கள்: FORWARD IN BIBLE READING**

இதுவரை நீங்கள் வேதத்தை முழுமையாக வாசிக்காமல் இருந்தால் பரவாயில்லை. தினந்தோறும் வேதத்தை வாசிக்க தீர்மானியுங்கள். இந்த ஆண்டிலிருந்து வேதத்தை ஆதியாகமத்தில் இருந்து முழுமையாக வாசிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுங்கள். ஒரு நாளைக்கு நான்கு அதிகாரம் வீதம் வாசித்தால் ஓர் ஆண்டில் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க முடியும். ஆகவே வேதாகமம் வாசிப்பதில் முன்னேறி செல்லுங்கள். வேதமே வெளிச்சம் நீதி.6:23. உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாக இருக்கிறது (சங்.119 : 105)

மேலும் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்ல, இதுபோல கிடைக்கிற எந்த ஒரு வாய்ப்பையும் தவறவிடாதீர்கள். மேலும் உங்கள் சபையில் உங்களுக்கு கிடைக்கிற சின்ன சின்ன வேலைகளையும் ஊழியங்களையும் உண்மையாய் செய்யுங்கள். ஆண்டு இறுதியில் காண்பிக்கப்படும் தீவிரத்தைவிட, ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சியில் காண்பிக்கும் தீவிரம் ஆசீர்வாதமாக இருக்கும். நிச்சயமாகவே தேவன் உங்களை வாலாக்காமல் தலையாக்குவார். நீங்கள் கீழாகாமல் மேலாவீர்கள்.

## II. படிப்பில் முன்னேறி செல்ல: TO MOVE FORWARD IN STUDIES

**1.தினந்தோறும் படிப்பதில் முன்னோக்கிச் செல்லுங்கள்: FORWARD IN DAILY ROUTINE**

பரீட்சை நெருங்குகிற கடைசி நேரங்களில் படிப்பில் காண்பிக்கும் தீவிரத்தையும், முக்கியத்துவத்தையும் இப்பொழுது இருந்தே காண்பியுங்கள். அது நிச்சயமாய் நல்ல பலனை உங்கள் படிப்பில் கொடுக்கும். ஆகவே தினந்தோறும் படிப்பதை பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். கடைசி நேரத்தில் படிப்பது தான் கெத்து என நினைத்து மற்றவர்களைப் போல காலத்தை வீணாக்கி விடாதீர்கள். The secret to your future is in your daily routine.

**2.புரிந்துகொள்வதில் முன்னோக்கிச் செல்லுங்கள்: FORWARD IN UNDERSTANDING**

படிக்கும்போது புரியாதவைகளை புரிந்துகொள்ள முயற்சி எடுங்கள். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அவைகளை தள்ளி போடாதீர்கள். காரணம் படிப்பில் புரிந்து கொள்வது என்பது மிக முக்கியமான ஒன்று. எந்த அளவுக்கு நமக்கு புரிகிறதோ, அந்த அளவுக்கு அது மனதில் பதியும். எந்த அளவுக்கு மனதில்

பதிகிறதோ, அதுதான் நம்முடைய பரீட்சையில் நமக்கு உதவி செய்யும். ஆகவே காலம் தாழ்த்தாமல் படிப்பதை புரிந்து கொள்வதில் முன்னோக்கி செல்லுங்கள். Procrastination makes easy things hard and hard things harder.

**3. மதிப்பெண்ணில் முன்னோக்கிச் செல்லுங்கள்: FORWARD IN MARKS**

நீங்கள் எழுதும் சின்ன சின்னத் தேர்வுகளிலும் முழுமையாய் கவனம் செலுத்துங்கள். வகுப்பு தேர்வுதானே என்று அஜாக்கிரதையாக விட்டுவிடாதீர்கள். சின்ன தேர்வாக இருந்தாலும், அதில் கூடுதலான மதிப்பெண் எடுப்பதை கவனத்தில் கொண்டு முன்னோக்கிச் செல்லுங்கள். இப்படி செய்வது உங்கள் ஆண்டு இறுதி தேர்வுக்கு அல்லது நீங்கள் எழுதப்போகும்போது பொதுத்தேர்வுக்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. Great things are done by a series of small things brought together.

இப்படி செய்து உங்களாலும் படிப்பில் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்து காண்பியுங்கள்.

அன்பானவர்களே, உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலும், உங்கள் படிப்பிலும் நீங்கள் வளர்ந்து அடுத்த நிலையில் முன்னேறிச்செல்ல தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். நிச்சயமாய் இந்த ஆண்டு உங்கள் வாழ்க்கையின் மேன்மையான ஆண்டாக இருப்பதாக. ஆமென்!

---

## *8 Rules for Spiritual Growth*

Eight rules that promote good health in babies can be adapted and applied to a Christian's spiritual growth.

1. **Daily Food.** Take in the "pure milk of the word" through study and meditation (1 Pet. 2:2).
2. **Fresh Air.** Pray often or you will faint. Prayer is the oxygen of the soul (1 Thess. 5:17).
3. **Water.** We must be filled with the Holy Spirit (John 7:38, 39).
4. **Regular Exercise.** Put into practice what you learn in God's Word. Witness for Jesus (James 1:22).
5. **Adequate Rest.** Rely on God at all times in simple faith (Mark 6:31).
6. **Clean Surroundings.** Avoid evil company and whatever will weaken you spiritually (Eph. 5:11).
7. **Loving Care.** Be part of a church. Benefit from a pastor's teaching and Christian fellowship (Heb. 10:25).
8. **Periodic Check-ups.** Examine your spiritual health (1 Cor. 11:31).

# PRIDE GOES BEFORE FALL
## (A study from the life of king Uzziah)

Success can lead to downfall if success is not handled carefully. That's one of the key lessons we learn from the life of King Uzziah in 2 Chronicles 26. God lifted up Uzziah and made him the King of Judah when he was just 16 years old (2 Chronicles 26:1). "He did what was right in the eyes of the Lord, just as his father Amaziah had done He sought God during the days of Zachariah who instructed him in the fear of God" (2 Chronicles 26:5). We come to know three key reasons for the downfall of a person, from the life of king Uzziah.

### 1. Downfall **COMMENCES** when we become proud.

The Bible says "As long as he sought the Lord, God gave him success"(2 Chronicles 26:5). God helped him (2 Chronicles 26:7) and his fame spread as far as the border of Egypt because he had become very powerful (2 Chronicles 26:8). The Bible records, "But after Uzziah became powerful, his pride led to his downfall (2 Chronicles 26:16a). *Are we becoming proud of our achievements in life?*

### 2. Downfall **CONTINUES** when we are unfaithful.

King Uzziah began to think that it was because of his own abilities that he was successful. "He was unfaithful to the Lord his God, and entered the temple of the Lord to burn incense on the altar of incense" (2 Chronicles 26:16b). Burning the incense in the temple was the job of the priests but King Uzziah dared to do it. He was disloyal to God by thinking that he could do anything he wanted to do even if it was against God's instructions. *Are we unfaithful and disloyal to God by doing things we are not supposed to do?*

### 3.Downfall is **COMPLETE** when we are unrepentant.

Azariah the priest and 80 other courageous priests pointed out to King Uzziah his unfaithfulness to God and said, "It is not right to burn the incense to the Lord" (2 Chronicles 26:18a). They asked him to leave the sanctuary and warned him that he would not be honoured by God (2 Chronicles 26:18b). But when he despised the priests' warning and angrily reacted to them, "...leprosy broke out on his forehead" (2 Chronicles 26:19). The Bible says, "...because the Lord had afflicted him" (2 Chronicles 26:20b). *Are we stubborn at times and refuse to set right our ways inspite of God correcting and, warning us?*

- Adapted



# தலைமுறை தலைமுறைக்கும் ஆண்டவருடைய சந்ததி


**Rev. S.P. ராஜசெல்வம்**

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பரிபூரண ஜீவன் இதழ் வாசகர்கள் அனைவருக்கும் AGCM சார்பாக புது வருட வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்**

**தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும் (சங்கீதம் 22:30).**

கர்த்தரை சேவிக்கும் சந்ததி எழும்பும் என்பதை தாவீது வலியுறுத்துகிறார். இந்த வசனத்தில் நாம் காணும் உள்ளான அர்த்தம் என்னவென்றால் ஒரு தலைமுறையில் துவங்கும் விசுவாசம் அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படும் என்று கூறப்படுகிறது.

இன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சேவிக்கிற ஆசிரியர்களாகிய, பெற்றோர்களாகிய நாம் அடுத்த தலைமுறையினருக்கு கர்த்தருடைய அன்பையும், பரிசுத்தத்தையும் போதித்து, கர்த்தரை சேவிக்கிற சந்ததியாக உருவாக்க வேண்டும் . அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று தலைப்புகளை தியானித்து கற்றுக் கொள்வோம்.

**1. கிறிஸ்துவுக்குள் விசுவாசம் உள்ளவர்களாக உருவாக்க வேண்டும்**

ரோமர் 4:21-ல் ஆபிரகாம் விசுவாசத்தில் வல்லவன் ஆனான் என சொல்லப்பட்டபடி பிள்ளைகளை விசுவாசத்தில் வல்லவர்களாக உருவாக்க வேண்டும்.

கொலோசெயர் 2:7-ல் விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடு அதிலே பெருகுவீர்களாக என்று சொல்லப்பட்டதின்படி பிள்ளைகளை விசுவாசத்தில் பெருகச் செய்து உருவாக்க வேண்டும்.

2 தீமோத்தேயு 1:13-ல் நீ கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோடும், அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு என்று சொல்லப்பட்டதின்படி விசுவாசத்தை ஒரு சட்டமாக கைக்கொள்ள பிள்ளைகளை பழக்கப்படுத்த வேண்டும்.

எபிரெயர் 11:24-ல் விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து என்று சொல்லப்பட்டதின்படி

இன்றைய சிறு பிள்ளைகளை உலகத்தில் உள்ள அனைத்து விதமான பாவ சந்தோஷங்களை வெறுத்து ஒதுக்கி கிறிஸ்துவின் சந்ததியாய் வாழ்வதற்கு விசுவாசம் அடிப்படை என்பதை தெளிவுபடுத்த வேண்டியது நமது கடமை.

**2. கிறிஸ்துவின் சந்ததியாக உருவாக்க வேண்டும்**

இவ்வுலகில் வாழுகிற எல்லா மனிதர்களும் தேவனால் உருவாக்கப் பட்டவர்கள். ஆனால் ஒரு சிறு கூட்டம் அல்லது ஒரு சந்ததி மட்டும் தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பதை நாம் காண்கிறோம். ஆனால் நம்முடைய தேவனுடைய விருப்பம் எல்லா சந்ததியும் ஜீவன் உள்ள கர்த்தரே

தேவன் என்று ஆராதிப்பதற்கு அனைத்து சிறு பிள்ளைகளுக்கும் இந்த நாளிலே இயேசுவின் அன்பை அறிவித்து அவர்களை விசுவாசத்திலே நிலைத்திருக்க ஊழியம் செய்வோமானால் வரும் சந்ததி கிறிஸ்துவின் சந்ததியாய் பெருகும்.

**3.கிறிஸ்துவை சேவிக்க உருவாக்க வேண்டும்**

யோசுவா 24:15-ல் நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என யோசுவா வைராக்கியமாய் சொன்னதின்படி கர்த்தரை எப்பொழுதும் ஆராதிக்கிற, துதிக்கிற சந்ததி எழ வேண்டும். .

ஆண்டவரை எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதை நாம் தான் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஒரு சிறு பிள்ளையை ஆண்டவருக்குள் நடத்தி விசுவாசத்தை கற்றுக் கொடுத்தோமானால் அவர்களுடைய சந்ததி கர்த்தரை சேவிக்கும் சந்ததியாக இருக்கும். இன்றைய உலகில் பல நிறுவனங்கள் பின் சந்ததிக்கு தண்ணீரை, இயற்கையை ஆரோக்கியத்தை செழிப்பை விட்டு செல்ல வேண்டும் என்று தீவிரமாய் செயல்பட்டு முயற்சி எடுத்து வருகின்றனர். இயற்கை எந்த விதத்திலும் அழிந்து போகக்கூடாது என்று பல தீர்மானங்களை எடுத்து செயல்பட்டு வருகின்றன. ஆவிக்குரிய பெற்றோர்களாகிய நாம் பின்வரும் சந்ததிக்கு விசுவாசத்தையும் தேவனுடைய அன்பையும் வேதத்தின் மகத்துவத்தையும் விட்டு செல்வது நமது தலையாயக் கடமையாகும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

## ஆண்டவரே ஏன் இப்படி?
## WHY LORD?

"என்னை ஏன் பலவீனப் படுத்திவிட்டீர்?"
"என் பலத்தைச் சார்ந்து வாழப் பழகிக் கொள்வதற்காக"...

"எனக்கு ஆதரவானவர்களை ஏன் அப்புறப்படுத்தினீர்?"
"நிலையற்ற மனிதர்களை சார்ந்து வாழ்வது சரியல்ல என்பதால்"..

"குழப்பமான சூழ்நிலைகளை ஏன் எனக்கு அனுமதித்தீர்?"
"தெளிவான முடிவுகளை எடுக்கும் பயிற்சியை நீ பெறுவதற்காக"...

"நான் கேட்டதையெல்லாம் நீர் ஏன் தரவில்லை?"
"உனக்கு எது தேவையோ அதை மட்டுமே நான் தர விரும்புவதால்"...

"அநீதியாளர்களை ஏன் எனக்கு எதிராக ஜெயிக்கவிட்டீர்?"
"நீதியினிமித்தம் துன்பப்படுவது அவசியம் என்பதால்"...

"விசுவசித்துக் கேட்டவைகளை நீர் அருள வில்லையே -ஏன்?"
"சரியானவைகளை நீ விசுவசித்துப் பழகுவதற்காக"...

"மற்றவர்களை மாற்றாமல் என்னையே நீர் மாறச் சொல்கிறீரே?"
"என்னை நேசிக்கிறவர்களைத்தான் நான் மாற்ற விரும்புகிறேன்"...

"அவசியமான சில நன்மைகளை நீர் எனக்குத் தரவில்லையே?"
"மிகத் தேவையானது இல்லாமலும் நீ வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதால்""...

"ஏன் எனது நல்லத் திட்டங்களை நீர் தோல்வியடையச் செய்தீரே?"
"அதைவிட நல்ல திட்டங்களை உனக்காக நான் வைத்திருப்பதால்"...

"வேறு சிலருக்கு நீர் அளித்த உயர்வை எனக்கு நீர் தரவில்லையே?"
"அவர்களின் அழைப்பு வேறு, உன் அழைப்பு வேறு என்பதால்"...

"நீண்ட காலம் என்னை காக்க வைத்து விட்டீரே?"
"நான் தரும் நன்மைகள் உன்னில் நிலைத்திருக்க அந்த காத்திருப்பு அவசியம் என்பதால்"....

"நான் மட்டும் சிறு தவறு செய்தாலும் தண்டித்து விடுகிறீரே?"
"என் பிள்ளையிடம் சிறு தவறும் இல்லாத பரிசுத்த வாழ்வை விரும்புவதால்"...

"என்னுடைய பல கேள்விகளுக்கு நீர் பதில் தருவதேயில்லையே?"
"நீ விளக்கங்களைச் சார்ந்தல்ல, விசுவாசத்தைச் சார்ந்து வாழ்வதற்காக"...

## ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளங்கள்

1. முதிர்ச்சியுள்ள கிறிஸ்துவன் தன் எஜமானனைப் (இயேசுவை) பிரியப்படுத்தி வாழுவான். அவரைப் போல மாற முயற்சிப்பான் (லூக்கா 6:40). இயேசு பிதாவுக்கு பிரியமானவைகளை மட்டும் செய்தார் (யோவான் 8:29; கலா.1:10).
2. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் எளிதாகக் கள்ள உபதேசங்களால் வஞ்சிக்கப்பட மாட்டான் (எபே.4:11-15). அவன் சத்தியத்தை நன்கு அறிந்து, தவறான உபதேசங்களை வெறுத்து விலகி வாழுவான் (சங்.119:104, ரோமர் 12:9).
3. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் நன்மை, தீமை இன்னதென்று பகுத்தறிகிறவனாக இருப்பான் (எபி.5:11-6:1). தேவ வசனத்தை ஜாக்கிரதையாகப் படிக்கும்போது அது நம்மை தேறினவர்களாக மாற்றும். சரியான தீர்மானங்கள் எடுக்க உதவி செய்யும் (2 தீமோ.3:16).
4. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் உபத்திரத்தைக் கண்டு அஞ்சமாட்டான் (யாக்கோபு 1 : 4-5). உபத்திரவம் வரும் என்பதை அறிந்திருப்பான் (அப். 14:22). அதில் பொறுமையாயிருப்பான் (ரோமர்12:12). அதில் சோர்ந்து போக மாட்டான் (1 பேதுரு 1:6,7; 12-16).
5. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனின் இருதயம் கர்த்தருக்கு நேராகச் செம்மையாயிருக்கும் (1 நாளா. 28:9; 1 இராஜா 8:61). தன் இருதயத்தை எல்லா காவலோடும் காத்துக் கொள்ளுவான் (நீதி. 4:23). ஆவிக்குரிய காரியங்களிலும் மேலானவைகளிலும் தன் இருதயத்தை வைத்திருப்பான் (கொலோ. 3:1,2).
6. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் வளரப் பிரயாசம் எடுப்பான் (2கொரி.7:1). விசுவாசத்தில் வளர்ந்து கொண்டே இருப்பான். தேவனுக்குப் பிரியமில்லாத தகாத உறவுகள், பேச்சுக்கள், நடத்தைகளை விட்டு விலகியிருப்பான் (சங்கீதம் 1:1-3).
7. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் ஒற்றுமையோடு வாழ பிரயாசப்படுவான் (1 கொரி. 1:10). பொறாமை, வாக்குவாதம், பிரிவினை ஆகியவைகள் முதிர்ச்சியற்ற கிறிஸ்தவனின் அடையாளங்கள் (1 கொரி.3:1-3). ஆனால் அன்பு, ஐக்கியம், ஒற்றுமை முதிர்ச்சியின் அடையாளங்கள் (பிலி. 2.1-4).
8. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் தன் நாவில் அடக்கம் உள்ளவனாயிருப்பான் (யாக்கோபு 3:2). வாயின் வார்த்தையில் கவனமாயிருப்பான் (யாக்கோபு 1:26). புறங்கூறுதல், மற்றவர்களைப் புண்படுத்துதல், குற்றஞ்சாட்டுதல் ஆகியவற்றில் ஈடுபடமாட்டான்.
9. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனிடம் உண்மையான. மாயமற்ற அன்பு காணப்படும் (கொலோ 3:14; ரோமர் 12:9,10; I யோவான் 2:5).
10. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் எப்பொழுதும் தேவனையே சார்ந்து வாழப் பழகியிருப்பான் (யோவான் 15:5). ஜெபம் அவனுடைய வாழ்வின் மூச்சாக காணப்படும்.
11. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனிடம் கலாத்தியர் 5:22,23 வசனங்களில் கூறப்பட்ட ஆவியின் கனிகள் அனைத்தும் காணப்படும்.
12. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் ஆத்தும பாரம் உடையவனாயிருப்பான். ஆத்தும ஆதாயம் அவனுடைய இதய துடிப்பாக இருக்கும் (1 கொரி. 9:16; 2 கொரி. 5:14).




## போட்டி எண் : 14 (சரியான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. சகரியா | - 26:14 | 14. பெலிஸ்தர் | - 14:9 |
| 2. தாவீது | - 29:28 | 15. அஸ்ரியேல் | - 7:14 |
| 3. சாலொமோன் | - 22:9 | 16. யோவாப் | - 11:6 |
| 4. ஊலாமின் குமாரர் | - 8.40 | 17. பினேகாஸ் | - 9.20 |
| 5. எல்க்கானான் | - 20:5 | 18. யோனத்தான் | - 27:32 |
| 6. பெனாயா | - 11:22 | 19. தாவீது | - 21:17 |
| 7. நிம்ரோத் | - 1:10 | 20.ஊசா | - 13:10 |
| 8. கெனானியா | - 15:22 | 21. அசரியா | - 9.11 |
| 9. செபுவேல் | - 26:24 | 22. யாபேஸ் | - 4:9 |
| 10. யோசபாத் | - 18:15 | 23.லேவியர் | - 23:3 |
| 11. ஆகான் | - 2:7 | 24.நாகாஸ் | - 19:1 |
| 12. ஆசாப் | - 25:2 | 25. அசரியா | - 6.10 |
| 13. பாகால் | - 5:5 | | |

## போட்டி எண் : 14 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:**K.மகேஷ்வரி; S.கலா ராஜம்; M.எஸ்தர்; J.சுமதி; கிரிஜா; கோகிலா; கனகவல்லி; E.கலா; தனபாக்கியம்; விஜி; பிரபா; மெர்ஸி ராஜம்; சாந்தி; கிறிஸ்டி; V.மகேஷ்வரி; மாது; குளோரி; சித்ரா; ராணி பிளசிங்; இவாஞ்சலின்; முத்து கோபால்; ஜெயசிலின்; முத்துலெட்சுமி; புஷ்பவல்லி; மயில்; ராதாமணி; T.கலா;| **ஸ்ரீவில்லிபுத்தூர்**: கிருபா; மாதவி; J.வசந்தா; நெல்சன் செல்வராஜ்; அபிராமி; R.வசந்தா; பாஞ்சாலிTr; மெசி; காபிரியேல்; அழகு நாச்சியார்;| **இராதாபுரம்**: பிரேமா; மரகதம்; ஜெயா; ஜெயா சாரோன்; செல்வபிரியா; நித்யா; மல்லிகா; அருள்செல்வி; ஜாஸ்மின்;| **ஆறுமுகநேரி**: செல்வபிரியா; அனன்சி அருண்; R.ஜெபா; வெண்ணிலா எஸ்தர்; மணி மேனகா; சிவகாமி; சரோஜா; கனிஷ்டா மெர்டன்; அன்சி ரத்னம்;| **சேத்துப்பட்டு**: ரெக்ஸி ஈஸ்வரன்; சுகந்தி பெனடிக்; மரகதம்; மெர்ஸி; லெஷ்மி காந்த்; செல்வமொழி; ஷாலினி; ரீட்டா புஷ்பலிங்கம்;| **கவரைப்பேட்டை**: புவனா; நந்தினி; பிளஸ்ஸி வசந்த்; தங்கம்; மணிமேகலை; சலோமி| **கடையநல்லூர்**: ஆஷா தேவி; பெல்சியா; சித்ரா;

## போட்டி எண் : 14 (சரியான விடை எழுதியவர்கள்...)

வினோலியா; தங்கராஜ்; செல்வி இந்திராணி;| **சுரண்டை**: பியூலா கமலம்; ரூபி; ஜீனா; ஜெயமேரி; குளோரி ஞானம்;| **கோயம்புத்தூர்**: நித்யா பெர்க்மான்ஸ்; கிறிஸ்டினா அபிகாயில்; மேரி டென்சில்; எஸ்தர் விஜய்; இந்திராணி;| **உடுமலைப்பேட்டை**: ரோஸ்லின்; ஜெயந்தி; புஷ்பா எட்வர்ட்; சந்தனா மதன்; அன்னபாப்பு;| **ஆண்டிபட்டி**: புளோரியா; எஸ்தர் ராஜி; பூங்கொடி; தேவபாக்கியம்; ராணி;| **திருச்சி**: K.சாந்தி; ஜாஸ்மின் உஷாராணி; கிறிஸ்டி மகாலஷ்மி; பிரதீபா;| **தேனி**: தபீத்தாள் ராணி; பூமணி ஜான்சி; திரவியச்செல்வி; கிருபா;| **சென்னை**: பூங்கனி; மரகதலீலா; மேரிகுட்டி; மெர்லின் ஹெலன் பிரீதியா;| **ஆலங்குளம் (வி)**: பிரியா ஜெயபால்; R.மரியாள்; ரெஜினா சாரு; K.ஸ்டெல்லா;| **திருநின்றவூர்**: ரோஸ்லின் மேரி; S.தெரேசா; எழிலரசி; கேத்ரின்;| **நெல்வாய்**: S.ஆர்த்தி; மலர்விழி; பாலகிரிதரன்; அருணா;| **மடத்துக்குளம்**: கிரேஸ்மேரி; K.சரண்யா; சேர்மக்கனி; ஜெனிட்டா ஜூலியட் மேரி;| **நாகலாபுரம்**: ஷாலோம் இண்பெண்ட் சுஜந்த்; N.சாராள்; குளோரி அம்மாள்; லில்லி ஜெனட் தங்கம்;| **கள்ளக்குறிச்சி**: பத்மாவதி; மகேஸ்வரி; மல்லிகா; தங்கம் சாக்கோ;| **இறச்சகுளம்**: ஜெஸ்மின்; M.கலா; சிவதர்ஷினி, எஸ்தர்;| **தூத்துக்குடி**: கிறிஸ்டினா ஜோசப்; ஜாய் செல்வி; சுகந்தி; ஆரோக்கியசாமி;| **உக்கிரன்கோட்டை**: குழந்தை திரசம்மாள்; முத்துச்செல்வி; நான்சி ரேச்சல்;| **களக்காடு**: மெர்லின் எமிமா; விமலா டேனியல்; சாந்தி நம்பிராஜன்;| **நாகப்பட்டினம்**:K.கவிதா; ஜான்வெஸ்லி பிரிஸ்ஸில்லா;| **அச்சரப்பாக்கம்**: விஷ்ணுப்பிரியா; செல்வகுமாரி;| **வீரபாண்டிய பட்டணம்**: தேவதாஸ்; சுகிர்தா டைட்டஸ்;| **கொக்கராயன் பேட்டை**: M.ஷாலினி; ரீட்டா;| **பழனி**:K.சாந்தி; பிரிசில்லா;| **உவரி**: எமல்டா; ஜெரால்டின்;| **ஆம்பூர்**: ரூபி மனோகரன்; சுகன்யா வின்னி;| **மேல அனுப்பானடி**: அனிதா; ஜெயா;| **கோவில்பட்டி**: செல்வின் பால்; ரேச்சல்;| **பெருங்குளம்**: அருள்குமார்; கௌசல்யா;| **ஓசூர்**: மார்கஸ் ரிச்சர்டு; ஜெமிந்தா;| **நாகமலை**: விஜிலா; ஆனந்தி;| **மூலைக்கரைப்பட்டி**: தமிழ்செல்வி; கவிதா;| **பெரியகுளம்**: ஜேம்ஸ்மேரி; நாகேஸ்வரி ராமர்; | **கொட்டிவாக்கம்**: அமுதவல்லி;| **K.P.வலசை**:A.P.சீலி;| **விருத்தாச்சலம்**: பெஞ்சமின்;| **பெரமனூர்**: K.ஜான்சிராணி;| **திண்டிவனம்**; சாராள் அறிவுச்செல்வி;| **உக்கடம்**: ஸ்டெல்லா குமார்;| **கோடம்பாக்கம்**: மௌலின்;| **எடப்பாடி**: ஜோசப்மேரி;| **கடாட்சபுரம்**: ரேவதி கில்பர்ட்;| **சாத்தூர்**: சரோஜா;| **வெண்ணாம்பட்டி**: அலெக்ஸ்;| **சீரநாயக்கன் பாளையம்**:P.ரத்தினம்;| **குரோம்பேட்டை**: கோமதிகுமார்;| **இலுப்பையூரணி**: V.வால்டர் சிங்;| **அச்சன்குளம்**: சுலோச்சனா;| **தனக்கன்குளம்**: S.ஸ்வீட்டி கரோலின்;| **திருநகர்**: சித்ரா;| **ஆழ்வார் திருநகரி**: R.பனிமலர்;| **ஆயக்குடி**:லீலா;| **சங்கரலிங்கபுரம்**: மலர்கொடி;| **எழில்நகர்**: மோனிகா சாமுவேல்;| **வீராணம்**: R.செல்வின்;| **பவூர்சத்திரம்**: S.ஜெசிலி;| **வேப்பம்பட்டு**:S.சுகந்தி;| **அனகாபுத்தூர்**: மகேஷ்வரி;| **அகஸ்தியர்பட்டி**: நிர்மலா;| **விளாங்குறிச்சி**: கிறிஸ்டினா ரகுநாத்;|**திசையன்விளை**: செல்வபாக்கியம்:| **வேளச்சேரி**: ஜெஸ்லி; T.ஜீவா;| **திருநெல்வேலி**: சுகுணா ரூபி;| **திருவள்ளூர்**: கிரேஸி லிடியா;|**வில்லிவாக்கம்**: ஜோஸ்மின் ரத்னா;|**குறிச்சான்பட்டி**:காஞ்சனா;|**கொங்கந்தான்பாறை**: சந்திரா ஆல்பர்ட்;|**சிருவை**: ஆரோன் அருண்குமார்;| **ஜலகண்டபுரம்**: கவிதா;| **தர்மபுரி**: ரூத்;| **கொற்றிகோடு**: D.கிறிஸ்டி ரிச்சர்டு;| **இளையரசனேந்தல்**: மெர்ஸி அகஸ்டா;| **திருப்பத்தூர்**: ரூத்;| **கல்லல்**; அபிஷாக்;| **பரமத்திவேலூர்**: திருச்செல்வி;|**முளகுமூடு**: மார்கிரட் ராணி;|**புதுக்கோட்டை**: லலிதா;| **நத்தக்காடையூர்**: ஏசையன்;| **V.K.புதூர்**:எஸ்தர்;| **பண்ருட்டி**:கிளாரா ராபர்ட்;|**கடலையூர்**: எஸ்தர் ஆபிரகாம்;|**அய்யம்பாக்கம்**:அம்மணி;|**பள்ளிக்கரணை**: அழகுமுத்து;| **சிவகிரிப்பட்டி**: ஆபிரகாம்;| **வெள்ளகால்**: கலா சுரேஷ்;| **ஆதம்பாக்கம்**: ராதா தாமஸ்;| **கரூர்**: ஜெயமணி;| **முத்தையாபுரம்**: பிரியா அகஸ்டின்;| **மதுரை**: கனகவல்லி;| **விநாயகாபுரம்**: ரெஜினாள் மாணிக்கம்;| **சேலம்**: பெட்ரீஷியா டேவிட்;|**இடைகால்**: செல்வி ஜான்சன்;| **முக்கூடல்**: முத்து கிருஷ்ணன்;|**பழையகாயல்**: எலிசபெத்;| **ஆவடி**: சந்திரா சாலொமோன்ராஜ்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-15
## 2 நாளாகமம் (பொருத்துக)
### (இருப்பிடத்துடன் விடையை நேராக எடுத்து எழுதவும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | எலியாதா | - | நேபாத்தின் குமாரன் |
| 2. | உசியா | - | ஸ்தோத்திரம் |
| 3. | இல்க்கியா | - | அசீரியா ராஜா |
| 4. | யோராம் | - | புலம்பல் பாடியவன் |
| 5. | எசேக்கியா | - | அக்கினி |
| 6. | உல்த்தாள் | - | யோய்தாவின் பெண்ஜாதி |
| 7. | அபி | - | யோவதானாள் |
| 8. | ஓதேத் | - | ஆசாரியன் |
| 9. | செமாயா | - | இம்லாவின் குமாரன் |
| 10. | மனாசே | - | பராக்கிரமசாலி |
| 11. | யெரொபெயாம் | - | பகுதி விசாரிப்புக்காரன் |
| 12. | எரேமியா | - | நானூற்று ஐம்பது தாலந்து பொன் |
| 13. | தில்காத்பில்நேசர் | - | ஆறு |
| 14. | மிகாயா | - | சேஷ்ட புத்திரன் |
| 15. | அதோனிராம் | - | மலை |
| 16. | யோசேபியாத் | - | தேவனுடைய மனுஷன் |
| 17. | அமத்சியாவின் தாய் | - | தூண்கள் |
| 18. | யாகீன், போவாஸ் | - | கர்த்தருடைய தீர்க்கதரிசி |
| 19. | பெராக்கா | - | அணை கட்டியவன் |
| 20. | செப்பத்தா | - | வெள்ளாண்மைப் பிரியன் |
| 21. | தர்ஷீஸ் | - | பெண் தீர்க்கதரிசி |
| 22. | கீதரோன் | - | கப்பல் |
| 23. | மோரியா | - | புத்திமானாகிய நிபுணன் |
| 24. | பலிகளை பட்சித்தது | - | வெண்கலச் சங்கிலி |
| 25. | ஓப்பீர் | - | பள்ளத்தாக்கு |

குறிப்பு: விடையை புத்தகத்தில் எழுதி அனுப்பாமல் தனியாக பேப்பரில் எழுதி அனுப்பவும்

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.2.2026



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**

16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## ஐதரபாத், பாட்னா, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் நடைபெற்ற GLOBAL UNIVERSITY பட்டமளிப்பு விழா











## FAMILY ENRICHING SEMINAR - DELHI










## செங்கல்பட்டு மண்டல மிஷன் கன்வென்ஷன்



Registered News Paper Regd. No. 8206 / 62

வாசகர்கள் அனைவருக்கும்

# இனிய புத்தாண்டு

நல்வாழ்த்துக்கள்

*Happy New Year*

# 2026

ASSEMBLIES OF GOD

AG

## ASSEMBLIES OF GOD

தமிழ் பிரதேசம்

## எழுப்புதலின் 10 ஆண்டுகள்

ஜெபக்குறிப்புகள்

ஒரு ஆண்டிற்குரிய இலக்குகளுக்காக ஜெபியுங்கள் 2026

- 35,000 ஜெப பங்காளர்கள்
- 35,000 புதிய அங்கத்தினர்கள்
- 350 மூப்பர் பயிற்சி
- 350 புதிய ஊழியர்கள்
- 350 கிராம வீட்டு சபைகள்
- 300 புதிய சபைகள்
- 60 மினரிகள்

## DECADE OF REVIVAL
## 2021-2030

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

BOOK POST

If Undelivered please return to
PARIPOORANA JEEVAN
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664